மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-XIII.	Madras: April 1911.	No. 4.
புத்தகம் - ௧௩.	சென்னப்பட்டணம்: ஏப்ரல்மீ 1911.	இலக்கம்-4.

வீட்டுப் பழக்கம்.

தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும் என்கிற பழமொழியின்படி குழந்தைகளுக்கு நாம போதிக்கும் விஷயங்கள் அவர்கள் பெரியவர்களானபோதிலும் அவர்கள்மனதில் பதிந்திருக்கும். நாம் குழந்தைகளுக்குமுன் செய்யும் காரியங்களையும் குழந்தைகள் உற்றுநோக்கி கவனித்து அக்காரியங்களைச் செய்யமுயலும். ஆகையால் தாய்தந்தையர்கள் தங்கள் குழந்தைகளிடத்தில் நல்ல வார்த்தைகளைப் பேசியும், நற்செய்கைகளைச் செய்தும் வரவேண்டும். இவ்விதம் செய்துவரின் குழந்தைகள் இவைகளைப் பின்பற்றி நடந்து நல்லவர்களென பெயர் எடுப்பார்கள்.

நமது தேசத்தில் கல்வியில்லாத தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை நல்வழியில் நடத்த சக்தியற்றவர்களாயிருந்தும் கூடியவரையில் தங்கள் குழந்தைகள் படித்து தேர்ந்து நற்பெயர்வகிக்க வேண்டுமென்கிற எண்ணமுடையவர்களாயிருக்கிறார்கள். கற்றவர்களோ தங்களாலியன்றமட்டும் தங்கள் குழந்தைகளுக்கு நற்போதனைகளைப் போதித்து. அவர்கள் பெரியவர்களாகும்பொழுது யோக்கியர்களாயிருக்கவேண்டுமென்று எண்ணுகிறார்கள். சிற்சில சமயங்களில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை மேற்கூறிய வண்ணம் நடத்தி வருவதற்குப் பதிலாக நேர்விரோதமாக நடத்தி வருகிறார்கள். தங்கள் பிள்ளைகள் பொய் சொல்லவும், கற்பிக்கிறார்கள்; அல்லது அவர்கள் துர்நடத்தை முதலியவைகளுக்கு ஏதுவாயிருந்து அவர்களை அவ்விதச் செய்கைகளைச் செய்ய தூண்டுகிறார்கள். இது பெருத்த தப்பு. இவ்விதம் செய்துவந்தால் நமது புத்திரி, புத்திரர்கள எக்காலத்தில் நல்லவர்களாகக்கூடும்?

திருஷ்டாந்தமாக கௌபவர்கள் கெட்டழிந்தது அவர்களது பெற்றோரின் தப்பே. பாண்டவர்கள கஷ்டங்களை அனுபவித்தபோதிலும் கடைசியில் சுகமடைந்தது அவர்களது தாயின் நற்போதனையே. இவ்விதம் ஐரோப்பா கண்டத்தில் அநேகர் தங்கள் பெற்றோர்களின் நற்போதனையால் நல்லபெயரும், கீர்த்தியுமடைந் திருக்கிறார்கள். அவர்களில் ஜான் ரஸ்கின் என்பவர் அதிக செலவமுள்ள குடும்பத்தில் உதித்தவர். இவர் தகப்பனர் 1,57,000 பவுன் சேர்த்துவைத்தார். வீட்டுக்காக சம்பளத்தில் பாதிதான் செலவு செய்துவந்தார். தமதுகுமாரனை வெகு அன்பாகவும், செல்வமாகவும் நடத்தி

வந்தார். ஆயினும் ரஸ்கின் படிப்பு, சேர்க்கை முதலியவைகளில் வெகு கண்டிப்பாயிருந்தார். இவரது தாயாரும் அவ்விதமிருந்தாள். தாயாரே தமது குமாரனுக்கு சிறுவயதில் நீதிநூல்களையும் பைபில்வேதத்தையும் போதித்து வந்தாள். ஒருசமயத்தில் ரஸ்கின் ஒரு வேதவாக்கியத்தைப் படித்து மனப்பாடம் செய்து சொல்லத் தவறினபொழுது அதை மறுபடியும் படித்துப் பாடம் செய்து, சொல்லுகிறவரையிலும் அதையே பாடமாகக் கொடுத்து வந்தாளாம்; 10 அல்லது 15 தினங்களுக்குமுன் ரஸ்கின் அதைப்பாடம்பண்ணி தமதுதாயாரிடத்தில் பிழையின்றி சொல்லியபொழுது தாயார் அடுத்த வாக்கியத்தை மறுநாள்பாடமாகக் கொடுத்தாளாம்.

எப்பொழுதும் உண்மையைப் பேசவும் அதன்படி நடந்துவரவும் தமது புத்திரனுக்குப் போதித்துவந்தாள். இப்படிச்செய்து வந்ததனால் ரஸ்கின் மிக யோக்கியரென பெயரெடுத்தார். ஒரு சமயத்தில் "இவ்வுலகத்தில் ஒருவருக்கும் அலங்காரஞ் செய்துக்கொள்ள நகைகள தேவையில்லை; ஆனால் ஒவ்வொருவருக்கும் உண்மை அவசியம்வேண்டும். நற்சிந்தனைக்குப் பொய் என்னத்திற்கு? உங்கள் சுவற்றைச் சமமாகப் பலகையைப்போல் வைத்துக் கொள்ளுங்கள்; ஆனால் அவற்றைப் பொய்யால் நிரப்பி மேடு பள்ளங்களாகச் செய்யாதேயுங்கள்" என சொல்லியிருக்கிறார். இவர் இன்னும் வெளிப்பகட்டான நகையைப்பற்றி இருத்துரைத் திருக்கிறார். அதாவது "நமது சக்தியில் ஒருவிஷய மிருக்கிறது, நமக்கு இடைஞ்சற் படுத்தும்வழியில் நவரத்னங்கள், அழகும் விலையுமுள்ள நகைகள், டம்பமான வஸ்திரங்க ளெல்லாமிருந்து அதிக துன்பத்தை விளைவிக்கும். அவைகளால் நாம் சந்துஷ்டியாயும், ஞானமுள்ளவர்களாயு மிருக்கமுடியாது. ஆனால் தாழ்வற்ற உணர்ச்சியையும், மனதில் இரக்க மின்மையையும், புத்திக் குறைவையும் உண்டாக்கும். நாம் ஜீவிப்பதற்குச் செய்ய வேலையிருக்கிறது. அதை விடாமுயற்சியுடன் செய்துவரவேண்டும். நமது சந்துஷ்டிக்குச் செய்ய வேண்டிய இதரவேலையுமுண்டு. அதையும் மனதாறச் செய்யவேண்டும். இவைகளை அரைகுறையாகச் செய்யக்கூடாது. மனப் பூர்வமாகச் செய்ய வேண்டும். தன் மனதுக்கு விரோதமின்றி காரியங்களைச் செய்துவருபவன் தேவாமிருத முண்டவன்போ லிருப்பான்." ஆகையால் உண்மை என்கிற நகை, ஒவ்வொருவர் பேச்சிலும், செய்யும் காரியத்திலு மிருக்கவேண்டும். பொய் கிட்ட அண்டக்கூடாது.

ஒவ்வொரு வஸ்துவையும் உற்று நோக்கும் சக்தி இவரிடத்திலுண்டு. இது இவருடைய தகப்பனாரால் வந்தது. சித்திரம் வரைவது அக்காலத்தில் அதிக தேர்ச்சியடையாம லிருந்தபோதிலும் சித்திரம் வரைவதிலும் சித்திரத்தைக் கண்டு மகிழ்வதும் இவரது தகப்பனாரது வழக்கம். இவ்விதமே தமது புத்திரனையும் நடத்திவந்தார்.

ரஸ்கின் தகப்பனார் தமது பந்துக்களில் ஒருவருக்கு இனமாக 7000 பவுன் கொடுப்பதாகச் சொல்லியிருந்தார். ஆனால் எக்காரணத்தினாலே மறந்து உயிலில் இச்சங்கதியை எழுதவில்லை. ரஸ்கின் அவ்வுறவினருக்கு தமது தகப்பனார் சொல்லியிருந்த வண்ணம் 7000 பவுனையும் கொடுத்துவிட்டார். மேலும் ஒருஸ்திரீ சிறைச்சாலையில் அடைக்கப்பட்டாள். 40-பவுன் கொடுத்தால விடுதலையடைவாள். ஆனால் இவளிடத்தில் பணமில்லை. ரஸ்கின் இதைக் கேள்வியுற்று 40 பவுனையனுப்பி இந்த ஸ்திரீயை சிறைச்சாலையிலிருந்து விடுவித்தார். இது இவருடைய தயாளகுணத்தைக் காண்பிக்கின்றதல்லவா?

இவர் தமக்கென்று சுமார் 12,000 பவுன் மாத்திரம் வைத்துக்கொண்டு மிகுதியுள்ள 1,37,000 பவுனை ஏழைகளுக்கு உதவிபுரிந்தும், விநோதசாலைக்கும் (Museum) சகாயம் செய்துவந்தார். தமக்கு பேர்வரவேண்டுமென்று சிறிதும் எண்ணவேயில்லை. இவர் எழுதிய புஸ்தகங்கள் மிக அருமையானவைகள். இவருக்கு மாதர்களிடத்தில் மரியாதையும் அவர்கள் நல்ல ஸ்திதியிலிருக்க வேண்டுமென்கிற எண்ணமுண்டு. இவ்வித நற்குணமமைந்த வித்வான் தமது தாய்தந்தையர்களின் போதனையால்தான் தாம் இவ்வித ஸ்திதிக்குவந்தார் என ஒருபுஸ்தகத்தில் தாமே வெளிப்படையாக கூறியிருக்கிறார்.

கடைசியாக இவர் பிறந்த குடும்பமோ செல்வம் நிறைந்தது. ஆயினும் செல்வச்செருக்கால் கெட்டவர்களுடன் சேர்ந்து கெடாமல் படிப்பில் தேறியும், தர்மம், தயாளகுணம் முதலிய நற்குணங்களுடன் விளங்கியது அதிசயமன்று! ஆனால் "ஏழையாயிருந்து முன்னுக்கு வருபவர்கள பற்பல நன்மைகள் செய்வார்கள். திரவியவந்தர்கள் அவ்விதம் செய்யமாட்டார்கள்" என்று சிலர் சொல்வதுண்டு. தனவந்தர்களில் அநேகர் இவ்விதம் செய்திருக்கிறார்கள். செய்தும் வருகிறார்கள்.

ஆகையால் தாய்தந்தையர்கள் தங்கள் குழந்தைகளை அப்பருவ முதற்கொண்டே சரியானவழியில் நடத்திவர முயலுவார்களென்றும் நம்புகிறோம்.

கறையான்.

சில நாளைக்கு முன் எறும்புகளைப்பற்றியும் அவற்றின் சில அற்புத குணங்களைப் பற்றியும் பேசினோமல்லவா? இம்முறை கறையானைப்பற்றிச் சில விஷயங்கள் பேசுவோம். கறையானும் எறும்பைப்போலவே சிறிய ஜந்துவாயும் சுறுசுறுப்பாயும் இருப்பதுபற்றி ஆங்கிலேயர் அவற்றை White-ants (வெள்ளை எறும்புகள) என்பார்கள். உண்மையாக எறும்புகளுக்கும் கறையானுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது; இரண்டும் வெவ்வேறு இனம்.

உற்று நோக்கினல் கறையானுக்கும் எறும்புகளுக்கும் உள்ள பல வித்தியாசங்கள் புலப்படும். முதலாவது கூடுகட்டுவதிலேயே வித்தியாசம் இருக்கின்றது. சாதாரணமாய் எறும்புகளின் கூடுகள நிலத்துக்கடியிலேயே இருக்கும். கறையான் புற்றோ சில இடங்களில் 10, 15 அடி உயரம்கூட பூமியின் மேல் இருக்கும். எறும்பு தனக்குக் கிடைத்த உணவை வெகுவேகமாய் குழிக்குக்கொண்டுபோவதையும் கறையான தன்புற்றிலிருந்துஒரேவழியாய் அப்பால்உள்ள குச்சி, கூளம்வரையில், குழாய்போல்செய்துகொண்டு போவதையும்பார்த்தால் மற்றொரு வித்தியாசமவிளங்கும். பாச்சை, பல்லி முதலிய சிறு ஜந்துக்கள் இறந்து கிடந்தால் எறும்புகள் வந்து மொய்த்துக்கொள்வதை நாம் தினமும பார்க்கிறோம். கறையான் அவ்வாறு செய்வதில்லை. எறும்புகள் புஷ்பங்களில்மேல் ஊர்ந்து போய் தேன் குடிப்பதும், இலைகளின் மேல் கொழுந்தாய் இருக்கும் தளிர்களின் மேலும் ஊர்ந்து செல்வதும் மிகவும் ஸகஜம். கறையான் பச்சையிலை, பூ, தண்டு இவற்றின் பக்கத்தில

வருவதில்லை. இதுவேபோன்று இன்னும் பல வித்தியாசங்கள் உங்களில் பலர் அறிந்து இருக்கலாம்.

ஆனல், கறையானும் எறும்பைப்போலவே கூட்டம் கூட்டமாய் வாழும் ஜந்துக்களில் சேர்ந்தது. ஒரு புற்றில் எவ்வளவோ ஆயிரக்கணக்கான கறையான்கள் வசிக்கின்றன. அவற்றுள் வேலைசெய்யும் கறையான்கள் சில; ஆண்பிள்ளைகள் சில; வீரர்கள் சில; சில இராணிகளும் உண்டு; இப்படியாகப் பலவகைக் கறையான்கள் ஒரு புற்றில் வாழும். வேலை செய்யும் கறையான் புற்றுக் கட்டிக்கொண்டே இருக்க வேண்டியதுதான்; வீரர்கள் புற்றைக் காத்துக் கொண்டு எல்லா வேலைகளும் சரிவர நடக்கின்றனவா என்று மேல் பார்வை பார்க்கின்றன. இவ்விரண்டு வகைக் கறையான்களுக்கும் இறகு முளைப்பதில்லை. இறகு உள்ளன ஆண் கறையான்.

இராணிக் கறையானுக்கும் இறகு இல்லை. ஒரு இராணியை எல்லாக் கறையானும் வெகு மரியாதையாய்க் காப்பாற்றுகின்றன. ஏனெனில் இராணியால் தான் அவற்றின் குடும்பம் விருத்தியடைகின்றது. குலத்தை வளர்க்கும் தெய்வங்கள் போன்று எண்ணி மற்றக கறையான்கள் எல்லாம் இராணியை மிகச் செல்வாக்காய்ப் போஷிக்கின்றன. இராணிக்கு முட்டையிடும் தருணம் ஏற்படும் வரையில் நகர்ந்து போகும் சக்தி உண்டு. முட்டையிடும் சமயம் நெருங்க நெருங்க அவற்றின் வயிறு அசாத்தியமாய்ப் பருத்துப்போகின்றது. அச்சமயத்தில் இராணிக் கறையானை முட்டை நிறைந்த ஒரு பை என்று தான் எண்ணவேண்டும். இராணிக் கறையானை நேரில் பாராதவர்கள் ஜனக் காக்ஷி சபைகளில்வைத்து இருக்கும் கறையான் வகைகளைப் போய்ப் பார்ப்பதினல் அதிகப் பிரயோஜனம் உண்டு. திருச்சினப்பள்ளியில் ஸெண்ட் ஜோஸப்ஸ் காலேஜில் மியூஸியத்தில் ஒரு கறையான் இராணியும் மற்றும் உள்ள விதங்களும் வைத்து இருக்கின்றனர். புற்றைப் போய்ப் பார்த்து உயிருடன் இருக்கும் கறையானகளையே பரிக்ஷை செய்தால் மிகவும் விசேஷம். இப்பொழுது விசேஷமாய் ஒவ்வொரு பாடசாலையிலும் பலவிதப் பூச்சிகளையும் பிடித்து வைத்து அவற்றின் விசேஷ குணங்களை நேரே பிள்ளைகளுக்கு போதிப்பதினல் சில பாடசாலை மியூஸியங்களிலும் இந்த ஜந்துக்களைப் பார்த்து பரிக்ஷை செய்யலாம்.

முட்டை யிடுவதற்கே ஏற்பட்ட ஒரு இயந்திரம் போன்ற இவ்விராணிக்கறையான்கள் முட்டையிடும் விதம் அதிக அற்புதமாயிருக்கும். முட்டையிடும் காலத்தில் இராணி அப்புறம் இப்புறம் அசைவதில்லை. இருந்த இடத்திலேயே நிலையாய் நின்று கொண்டு முட்டைகளைச் சரமாரியாய்ச் சொரிய ஆரம்பிக்கின்றது. ஒரு நிமிஷத்தில் சுமார் 60 முட்டைகளுக்குமேல்—அதாவது இமைப்பொழுதுக்குள் ஒரு முட்டை—இடுவதாக சாஸ்திர பண்டிதர்கள் கணக்கிட்டு இருக்கின்றனர். ஒரு நாளில், ஆகையால், ஒரு இராணிக் கறையான் 86 ஆயிரம் முட்டைக்குமேல் உண்டாக்குகின்றது!! கூடுகட்டும் வேலையோ, சிறிதும் வாட்டமின்றி, வேலைசெய்யும் கறையான்களால், நடந்து வருகின்றது; வீரர்களோ புற்றுகளைக் காப்பாற்றுகின்றன; இராணியோ அதிவேகமாய் கணக்கு மிதமில்லாமல் முட்டையிட ஆரம்பிக்கின்றது. ஆகவே, கறையான் விருத்தியடைவதற்கு என்ன தடை!! கறையான் இராணி முட்டையிடும் காலத்தில் அதற்கு வேண்டிய உணவு முதலிய வற்றை அளிப்பன மற்றக் கறையான்கள்!! இவ்விதமாகக் கண்டோர் அதியப்படும்படி ஆயிரக்கணக்காகத் தங்கள் குலத்தை விருத்தி செய்யும்

இராணிசளை மற்ற எல்லாக் கறையான் வகைகளும் பக்தியுடன் பாதுகாப்பது அதிசயமா !!

ஒரு இராணி ஒரு மணிநேரத்தில் சுமார் 3,000 க்குமேல் முட்டையிடுமானால், சில நாளில் உலகமெங்கும் கறையான்மயமாய் நிரம்பிவிடுமே என்று நீங்கள் ஐயப்படலாம். அப்படி ஆகாதபடி பல சத்துருக்கள் கறையானுக்கு ஏற்பட்டு இருக்கின்றன. தேள், நண்டு வாய்க்கிளி, எறும்பு, வலை யெலி, குருவி, காக்கை, கழுது, மனிதன்—ஆகிய எத்தனையோ எதிரிகள் கறையானையும்—ஈசல் என்று சொல்லும் இறகு உள்ள கறையானையும்—பிடித்துத் தின்னக் காத்து இருக்கின்றன. இக்காரணங்களால் கறையான் விருத்தியடையும் தோறும் நாசமும் அடைந்து கொண்டே வருகின்றன. அதினால்தான் கறையானுடைய விருத்தி மிதமாய் இருக்கின்றது. அவற்றின் புற்றுக்களைப்பற்றி இன்னொரு முறை பேசுவோம்.

சிற்றுயிர் இலக்கணம் கற்போன்.

வாயுபதார்த்தங்களும் இவற்றின் தன்மையும்.

இதற்கு முன் படித்த சில பாடங்களில் ஜலப்பொருள்களின் தன்மையைப் பற்றிப் பேசினோம்; ஜலப்பொருள்களுக்கு இடம் வேண்டுமென்பதைப் பற்றியும், ஜலப்பொருள்கள் அவை வைத்திருக்கும் பாத்திரத்தின் அடிப் பாகத்தையும் பக்கங்களையும் அழுத்துகின்றனவென்பதையும் ஜலபதார்த்தங்களில் மூழ்கியுள்ள ஒருவஸ்துவை அப்பதார்த்தங்கள் மேல்முகமாய் தாங்குகின்றனவென்றும், அவ்வஸ்துக்கள் மிதப்பதற்குக் காரணங்களையும் ஒருவாறாய்ச்சொல்லி முடித்தோம்.



ஜலம். எண்ணெய். பால்.

ஹைட்ராமீடர்.

இது மிதக்கும் வஸ்துக்கள் (ஹைட்ராமீடர்களும் கப்பல்களும்) என்ற பாடத்தைச் சேர்ந்தது. இவ்விஷயம் ஜனவரி மாதப்பத்திரிகைகளில் வெளிவருகிறது.

இனிச்சிலபாடங்களில் வாயு பதார்த்தங்களின் தன்மைகளைப் பற்றிப் பேசுவோம். கல்போன்ற கனபதார்த்தங்களுக்கு நிலையான உருவமும் அளவும் உண்டு; நாம்அவற்றை மாற்றினால் ஒழிய காரணமின்றித்தானாய் அவற்றின் உருவமும் அளவும் மாறுவதில்லை. ஜலபதார்த்தங்களுக்கு அளவுமட்டும் நிலையானதே தவிர அவற்றிற்கு உருவம் நிலையில்லை; ஜலபதார்த்தங்களின் அணுக்கள் ஒன்றின்மேல் ஒன்று நழுவி ஓடக்கூடியவைகளாய் இருப்பதால் எந்தப்பாத்திரத்தில் ஊற்றுகிறோமோ அப்பாத்திரத்தின் உருவத்தை அடைகின்றன.

வாயுபதார்த்தங்களின் தன்மை இவ்விரண்டிற்கும் மாறாய் இருக்கின்றனவென்பது பின் வரும் உதாரணத்தால் விளங்கும். ஒருகட்டி கற்பூரத்தை நமது பெட்டியில் வைத்துவிட்டு 4, 5 நாள் கழித்துப் போய்ப் பார்ப்போம்; கற்பூரம் முற்றிலும் காணாமல் போய் விடாவிட்டாலும் குறைந்து போயிருக்கும என்பதற்குச் சந்தேகமில்லை. கற்பூரம் எங்கே போயிற்று? காற்றாய்ப்போய்விட்டது என்று உமது பெற்றோர்கள் சொல்லக்கூடும்! அவ்வாறு போனதற்கு சாக்ஷியென்ன விருக்கின்றது? பெட்டி முழுவதும் மணம் வீசுகின்றது என்கிறீர்! ஆம், அது உண்மையே; இன்னும் ஒரு பரீக்ஷை செய்வோம். தலைவலிக்குப் போடுகிற (Eucalyptus) இயுகலிப்டஸ் எண்ணெயையாவது சாம்பிராணித் தைலத்தையாவது ஒரு சொட்டு மேஜைமேல் தெளித்துவிடலாம்; மணம் வீடெல்லாம் பரவுகின்றது. சிறிது நேரம் கழித்து எண்ணெய் விழுந்த இடம் தெரிவதில்லை. பள்ளிக்கூடங்களில் விளக்கு எரிவதற்கும், ஸ்டவ் என்று சொல்லும் அடுப்புப் பற்ற விடுவதற்கும், உபயோகப்படுத்தும் சாராயத்தை சொட்டவிட்டாலும் அப்படியே. இவையெல்லாம் ஆவியாய்ப் போகக்கூடிய வஸ்துக்கள். ஆவியாய்ப் போனவுடன் அவ்வாவி ஒரு இடத்தில் நிற்பதில்லை. எங்கும் வியாபிக்கின்றது. ஆகையால்தான் அதன் நாற்றம் வீடெல்லாம் பரவுகின்றது. இக்குணம் வாயுபதார்த்தங்களுக்கு விசேஷமாய் அமைந்துள்ளகுணம்; கற்போன்ற கனபதார்த்தம் தானே வீடெங்கும் பரவாது; புஸ்தகம், காகிதம், மரம், கண்ணாடி இவை பரவுவதை யாராவது பார்த்ததுண்டா? ஆனால் கற்பூரம், மென்தால், முதலான கனபதார்த்தங்கள் காற்றாய்ப் போவதுபற்றி வீடெங்கும் பரவுகின்றன. இப்புஸ்தகத்துக்கும் உமக்கும் நடுவேயுள்ள காற்றுக்கு (air) வாசனை யென்பதேயில்லை. ஆனால் ஒரு இடத்தில் ஒரு துணிபற்றி எரிந்தால் அல்லது ஒரு ஊதுவத்தி கொளுத்திவைத்து இருந்தால் வாசனை உள்ள காற்றுவந்து பரவுவதினால் நாம் துணி எங்கேயோ எரிகிறதென்றும் ஊதுவத்தி கொளுத்தி இருக்கின்றதென்றும் அறிந்துகொள்ளுகிறோம். காற்றுப்போன்ற வாயுபதார்த்தங்களின் அணுக்கள் நிலையாய் ஓர் இடத்தில் நிற்பதில்லை; அவை சதா பரவிக்கொண்டேயிருக்கின்றன. கிடைத்த இடத்தை யெல்லாம் அவ்வணுக்கள் அடைத்துக்கொள்ளும். ஒரு அண்டாவில் ஒரு சொம்பு ஜலம் ஊற்றினால், அவ்வண்டாவின் மற்ற பாகங்கள் எல்லாம் காலியாய் இருக்கின்றதே என்று, ஜலம் அண்டா முழுவதும் நிரம்புவதை நாம் கண்டதில்லை. அதுவேபோல் கன பதார்த்தங்களும மாறாது. ஆனால் ஒருசொட்டு Eucalyptus எண்ணெயை, ஒரு அண்டாவானாலும சரி அதைவிடப் பெரிய பாத்திரமானாலும் சரி, அதில விட்டுவிட்டால் போதும், அண்டாவின் எல்லா பாகத்திலும் அதன்காற்று பரவிக்கொள்ளும்; அண்டாமட்டுமா? அண்டாவைத் திறந்துவைத் திருந்தால்

வீடெல்லாம் பரவிவிடும். இம்மாதிரியாகவே வாயு பதார்த்தங்கள் நிலையாய் ஒரு இடத்தை அடைத்துக் கொள்வதில்லை என்பதைக்காட்ட பல உதாரணங்கள் சொல்லலாம்.

ஆனல் நான் சொல்லும் ஒவ்வொரு பரிக்ஷையையும் நீங்கள் ஒவ்வொருவரும் செய்துபார்க்கக் கூடியதாயும், சுலுவாயும் செலவில்லாமல் சாமான்கள் சம்பாதிக்கத் தக்கவைகளாயும் இருக்க வேண்டுமென்றே சாதாரணமாய் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு இவ்வுண்மைகளைக் கற்பிக்கக் காண்பிக்கிற பரிக்ஷைகளைப் பற்றிப் பேசவில்லை. ஆகவே, வாயு பதார்த்தங்களின் அணுக்கள் எங்கும் வியாபிக்கும் தன்மையுடையன வாகையால் அவைகளுக்கு என்று ஒரு அளவு இல்லை; இன்னதுதான் உருவம் என்றும் இல்லை. ஒரு பாத்திரத்தில்வைத்து மூடியிருந்தால் அப்பாத்திரத்தின் அளவையும் உருவத்தையும் உடைத்தாய் இருக்கும். திறந்துவிட்டால் அறையும் நிரப்பிக்கொண்டு, அதற்குமேல் வெளியிலும் புறப்பட்டுவிடும்; அடுப்பு எரியும் காலத்தில் கரித்தூளையும் சாம்பல்தூளையும் மற்றதூசிகளையும் எடுத்துவரும் புகை, சமையல் அறையில்மட்டும் பரவிவிட்டு அப்பால் செல்லாமல் நின்றுவிடுகின்றதா? இல்லையே; கதவைச் சாத்தியிருந்தால் கொஞ்சம் கொஞ்சமாய்க் கூடமெல்லாம் பரவுகின்றது, திறந்து இருந்தால் தாராளமாய்ப் பரவுகின்றது.

ஆர். கே. சுவாமி, பி. ஏ. எல். டி.

டெல்லி தர்பாரைப்பற்றி மகாராஜா செய்திருக்கும் விளம்பரம்:

இந்தியாகெஜட் விசேஷப்பதிப்பில் நமது மகாராஜா அவர்கள் தாம் இங்கிலாந்தில் ஜூன்௴ 22௳யிலும் இந்தியாவில் டிசம்பர்௴ 12௳யிலும் முடிசூட்டிக் கொள்வதைப் பற்றிச்செய்த விளம்பரம் பிரசுரமாயிருக்கின்றது. அது கீழ்வருமாறு:—"1910-ம் வருஷம் மே௴ 6௳ நமது பிதா காலஞ்செல்ல, கிரேட் பிரிட்டனுக்கும் அயர்லாந்துக்கும் கடலைத் தாண்டியுள்ள தேசங்களுக்கும் அரசனும் இந்தியாவுக்குச் சக்கிரவர்த்தியாயும் டிபென்டர் ஆப்பெய்த் (Defender of Faith) ஆயும் ஐந்தாவது ஜார்ஜ் என்கிற பெயருடன் கடவுள் கிருபையால் சிம்மாசனம் ஏறினபடியாலும், 1910-ம் ௵ ஜூலை௴ 19௳யிலும் நவம்பர்௴ 7௳யிலும் நம்முடைய ஆளுகை முதல் வருஷத்தில் 1911-ம் ௵ ஜூன்௴ 22௳ நாம் மகுடம் சூட்டிககொள்வதாகவும் விருப்பத்தை விளம்பரம் செய்தோமாகையாலும், நம்முடைய இந்தியா தேசத்திலுள்ள பிரஜைகளுக்கு இப்படி முடிசூட்டு ஆய்விட்டதென்று விளம்பரப்படுத்தவும் நமது கவர்னர்கள், லெப்டினண்ட் கவர்னர்களையும் நமது சம்ரட்சணையிலிருக்கும் மன்னர்களையும், நமது இந்திய ஏகாதிபத்தியத்திலுள்ள மாகாணங்களின் பிரதிநிதிகளையும் நம்முடைய சன்னிதானத்துக்குத் தருவிக்கவும் நாம் விரும்புகிறோமாகையாலும், நமது நம்பிக்கையுள்ள கௌன்ஸிலராயும் நமது வைஸிராயாயும் கவர்னர் ஜெனரலாயுமிருக்கும் சார்லஸ்பாரன் ஹார்டிஞ்ஸ் ஆப்பென்ஷஸ்டுக்கு இது மூலமாக அந்த விஷய

மாய் அவசியமான திட்டங்கள் செய்யும்படி ஆக்ஞாபிக்கிறோம். இப்படி நமது ஆளுகையின் முதல் வருஷமாகிய 1911-ம் வருஷம் மார்ச்சு மீ 22உ யில் பக்கிம்ஹாம் அரண்மனையில் நமது கோர்ட்டில் கொடுக்கப்பட்டது."

முடிசூட்டு வைபவம் தீபாலங்காரங்கள்.

முடிசூட்டு வைபவத்துக்காக நகர அலங்காரம் வெகு பரபரப்புடன் லண்டன் நகரத்தில் செய்யப்பட்டு வருகிறது. குன்றுகளிலும், உயர்ந்த கோபுரங்கள், மதில்கள் முதலியவைகளிலும் சிவப்பு, வெள்ளை, ஊதாநிற வெளிச்சங்கள் இரவு பத்துமணிக்குப் பிரதிதினமும் போடப்படுமாம். அச்சமயத்தில் "நாஷனல் ஆன்தம்" என்னும் ஜாதீயப்பாட்டு பாடப்படும்.

பாங்கிகளுக்கு விடுமுறை.

முடிசூட்டு வைபவத்தன்று அதாவது ஜூன் மீ 22உ பிரிட்டனிலுள்ள எல்லா பாங்கிகளுக்கும் விடுமுறையுண்டு. மறுநாள் லண்டனிலுள்ள பாங்கிகளுக்கு மட்டுந்தான் விடுமுறை.

ஹாலண்டு பிரதிநிதி.

ஜியார்ஜ் சக்கரவர்த்தியின் முடிசூட்டு வைபவத்தின்போது ஹாலண்டு அரசி வில்ஹெல்மீனாவுக்குப் பதிலாய் ஹாலண்டில் பிரதிநிதியாக பிரின்ஸ் கான்ஸார்ட் இங்கிலாந்துக்கு வருவாரென்று ஹேக் என்னுமிடத்திலிருந்து சமாச்சார மெட்டுகிறது.

நமதுமேரி ராணியாரின் தயாளகுணம்:—ஒரு சிறுபையன் வைத்தியசாலையில் இடுப்புவலியால் வருந்திக்கொண்டிருந்தான். அப்பொழுது ராணியார் அங்குசென்று அப்பையனுக்கு சில விளையாட்டுக் கருவிகளையும், பொம்மைகளையும் பரிசாக அளித்து தமது மாளிகைக்குச் சென்றபின், இப்பையன் பரிசுபெற்றதற்காக மகிழ்ந்து "ராணியாருக்கு வந்தனமளித்து, தாங்கள் அடிக்கடி இவ்விதம் வைத்தியசாலைக்கு வந்து வியாதியால் வருந்தும் எல்லாப் பிள்ளைகளையும் பார்ப்பீர்களென்று விரும்புகிறேன்" என்பதாக ஒரு கடிதம் எழுதியனுப்பினன். ராணியார் கடிதத்தைப்பெற்றவுடன் வைத்யசாலைக்கு வந்து அப்பையனைக்கண்டு உன் இஷ்டப்படி வந்திருக்கிறேன்" என்றார்களாம்.

நமதுமேரி ராணியாருக்கு வெகுமதி:—சீர்மையில் மேரி என்ற பெயருள்ள மாதர்கள் எல்லாம் சேர்ந்து பணம் வசூல்செய்து நமது ராணியாரின் பட்டாபிஷேக காலத்தில் வெகுமதியளிக்க, ஏற்பாடுசெய்து வருகிறார்களாம். வயது முதிர்ந்த இரண்டு ஸ்திரீகள 2 பென்ஸ் அனுப்பினார்களாம். ஒருவள் குருடி, மற்றொருவளுக்கு எழுத சக்தியில்லையாம். ஒரு குடும்பத்தில் மேரி என்ற நாமமுள்ள பெண்கள் எல்லாரும் சேர்ந்து 7 ஸ்டாம்புகளை நமது நற்குணமமைந்த ராணியாராகிய மேரி அவர்களுக்கு அனுப்பினார்கள்.

சர்வஜித்.

40-வது அத்தியாயம்.

[80-வது பக்கத்தொடர்ச்சி.]

இவர்களிக் குழப்பத்திலிருக்கும் போதே ஓடி வந்தார்களங்கே வீரனும் இரத்தினமும். உடனே உண்மைவெளியாயிற்று; கைதிகள் தப்பியோடி விட்டார்கள்!

"குதிரை, குதிரை" என்று கத்தினன் குண்டலீலன். ஏவலாட்கள் குதிரை லாயத்தை நோக்கி ஒரே ஓட்டந்தான்; ஒரு விநாடிக்குள் முப்பது நாற்பது குதிரைகள் நிறுத்தப்பட்டன. சகோதரர்கள் தேக அசௌக்கியம், காயம், வலி எல்லாவற்றையும் மறந்துவிட்டார்கள். குதிரைகள்மேல் தாவி விட்டார்கள். உடனே எல்லாக் குதிரைகளின்மேல் ஆட்கள் உட்கார்ந்திருந் தார்கள். நான்கு கூட்டங்களாகப் பிரிந்து திக்குக்கு ஒன்றாக ஓடிற்று. சகோதரர்கள் தலைமை வகித்த கூட்டமோ காட்டை நோக்கிச் சென்றது. பத்து நிமிஷங்களுக்குள்ளாக தங்களுக்குமுன்பாக நான்குபேர்கள் தலைகால்தெரியாமல் ஓடுவதைப்பார்த்தார்கள். "விரட்டு குதிரையை" என்றான் குண்டலீலன்.

"ஐயோ, அதிர்ஷ்டமற்ற சர்வஜித்தே" என்று சொல்லிக்கொண்டே மேலே செல்ல கால்வராமல் கீழேவிழுந்து விட்டான் கோபாலன்.

"ஆ, துஷ்டர்களே உங்களைப் பொசுக்கிவிடுவேன், இங்கு வராதேயுங்கள்" என்றாள் ஸ்திரீ. இதற்குள்ளாக அவளருகில் வந்த வீரன் தன் கத்திப் பிடியால் ஓங்கி அவள் மண்டையிலடித்தான். அவளும் செத்தவள்போல் விழுந்தாள். "இனி உன் பொய்களும் நின்றுவிட்டன" என்றான் வீரன். உடனே மற்ற மூவர்களும் பிடிக்கப்பட்டு கோட்டையை நோக்கிக்கொண்டு போகப்பட்டார்கள். காட்டு ஸ்திரீயோ விழுந்த இடத்திலேயே விடப்பட்டாள்.

41-வது அத்தியாயம்.

நித்யாநந்தர் ஸர்வஜித்தினறையிற் பிரவேசித்தபோது மணி எழு; சட்டப்பிரகாரம் அவன் இன்னும் ஐந்து மணிநேரம் உயிருடனிருக்க விடையளிக்கப்பட்டிருந்தான். நமது கதாநாயகனின் முகச்சாயல்களை மங்கலாய்க் காட்டிக்கொண்டு மேஜையின்மேல் ஒரு விளக்கெரிந்து கொண்டிருந்தது. வந்தவர் ஸர்வஜித்தினது கையை தனது கையிலேந்தி. "அப்பா, மகனே நீ மரணத்திற்கு ஆயத்தமாயிருக்கிறாயா?" என்றுகேட்டார். "ஆம், பெரியவரே, தயாராயிருக்கிறேன்" என்றான். "அப்படியாகில், உனது கர்த்தாவாகிய ஈசுவரனோடு சமாதானஞ்செய்து கொள்ளவேண்டியதற்காக, நீ செய்தவைகளையெல்லாம் என்னிடத்தில் ஒளிக்காமல் ஒப்புக்கொள்ளவேண்டும்," என்றார். "பெரியவரே, நான் ஒப்புக்கொள்ளும்படி ஒரு குற்றமுஞ்செய்யவில்லை. நான் நிரபராதியென்று நம்புங்கள்" என்று ஸர்வஜித் விடைகூறினன்.

"அப்பா, சிறுவனே, உன்முகம், உன் வார்த்தைகள், உனது கம்பீரம் எல்லாம் உன்னை நம்பும்படி செய்கின்றன. ஆயினும் மனதை நன்றாக சோதித்துப்பார்; அற்ப சொற்ப குற்றங்கள் செய்திருந்தபோதிலும் அவைகளை

வெளியிட்டு விடு. பகவானுடைய மன்னிப்பை யடைவதற்குத்தகுந்த பிராயச்சித்தங்கள் செய்யவேண்டியதவசியம். இப்போது மணி ஏழு; உன்னோடு ஒருமணி தங்குவேன்; அதற்குமேல் இரண்டு மணிநேரம்நீ தனித்திருப்பாய்; அப்போது உன்னைக்கடைசியாகப் பார்த்துவிட்டுப்போக வருகிறவர்களும் இங்கு வருவார்கள்; பத்துமணிக்கு நீ இவ்விடம் விட்டு கோவிலுக்கு வரவேண்டும்; அங்கு ஒரு மணிநேரம் பகவத்யானத்தில் காலத்தைப்போக்கவேண்டும்; பதினொரு மணிக்கெல்லாம் காட்டைநோக்கி வெளிக்கிளம்பவேண்டும்" என்றார் பெரியவர்.

"தாங்கள் இவ்வளவு சங்கதிகளையும் தெரிவித்ததற்காக சந்தோஷம். நான் மறுபடியும் சொல்லுகிறேன்; நான் யாதொருகுற்றமுஞ்செய்யவில்லை".

"இதோ பார்; நீ ஈசுவரன் சந்நிதியிலிருப்பதாக நினைத்துக்கொள். ஈசுவரனிடமிருந்து நீ ஒன்றையும் ஒளிக்கமுடியாது. இதோ பார். என் கையிலிருக்கிறது ஜபமாலை. இச்சபமாலை பரிசுத்தமானது. இதைக் கையில் வைத்துக்கொண்டு உண்மையைச் சொல்லிவிடு."

"ஐயா, பெரியவரே; நான் ஈசுவர சந்நிதியிலிருந்தாலும் இதைத்தவிர, வேறொன்றையும் சொல்லப்போகிறதில்லை. நான் முற்றிலும் நிரபராதி; இதுதான் உறுதி."

"மகனே, உன்னை நம்புகிறேன். நீ குற்ற மற்றவனென்பதிற் சந்தேகமில்லை. ஐயோ உனக்கு கொடுமையான முடிவு ஏற்பட்டிருக்கிறதே! உன்னைக் காப்பாற்றுவது எனது வல்லமையில் இல்லையென்பதை யோசிக்கையில் எனது மனம் ஆராத்துயரத்தை யடைகிறதே! அப்பா என் பக்கத்தில் உட்காரு, நாமிருவரும் பேசுவோம்".

உடனே ஸர்வஜித்தும் பெரியவரண்டையில் உட்கார்ந்தான். தனது சரித்திரத்தை ஆதியோடந்தமாய் பெரியவருக்குச் சொல்லிமுடித்தான். அச்சரித்திரத்தைக் கேட்டுக்கொண்டிருக்கையில் அவர் கண்களிலிருந்து நீர்தாரைதாரையாய்ப் பெருகிற்று. ஸர்வஜித் தனது வரலாற்றை முடித்தவுடன் நித்யாநந்தர் சிறுவனுக்குத்தகுந்த தேறுதல்களைச் சொல்லி, இரண்டு மணிநேரத்திற்கெல்லாம் அவனை மறுபடியும் சந்திப்பதாகச்சொல்லி அவ்விடம் விட்டகன்றார். கையில் விளக்கைப் பிடித்துக்கொண்டு மச்சுப்படிகளேறி மறுபடியும் பிரபு அநங்கன் ஜில்லா அதிகாரி மற்றுமுள்ள சந்நியாசிகளைக் கூடுவதற்கு ஒரு கூடத்தின் வழியாய்ச்சென்று கொண்டிருக்கையில், வழியில் நிழலிலோரமாக ஒரு உருவம் நின்றுகொண்டிருப்பதைக் கண்டார். விளக்கை அந்த உருவத்திற்கு நேரே பிடிக்கையில், அது சந்நியாசி உடை தரித்திருந்தது; தன்னுடன் வந்த சந்நியாசிகளி லொருவராய் இருக்கக்கூடுமென்று சந்தேகித்தார். வந்த சந்நியாசி நிழலில் ஒதுங்கிக்கொண்டு அசைவற்று நிற்பதைக்கண்டு வியப்படைந்து, உருவத்தைநோக்கி, "நண்பரே, இங்கு என்ன செய்கிறீர்?" என்றுகேட்டார். மெல்ல மெல்ல அவ்வுருவம் அவரை நோக்கிற்று;மெல்லமெல்ல அவ்வுருவத்தின் நீளச்சட்டையும் தென்பட்டது;நித்யாநந்தர் நடு நடுங்கிவிட்டார்; ஏனெனில் சட்டைக்குள்ளே யிருந்தது தசை சிறிதுமில்லாத ஒரு எலும்புக்கூடு! அதே காலத்தில் அக்கூட்டிலிருந்து ஒரு சத்தம் புறப்பட்டது. ஏ நித்தியாநந்தா, நம்முடைய ஒப்பந்தம் இப்போது நிறைவேறிவிட்டது, இதோ உனது நண்பனான பிரும்மாநந்தனைப் பார்."

நித்யாநந்தர் திகிலினால் ஸ்வவசமற்று கையில் பிடித்திருந்த விளக்கை நழுவ விட்டுவிட்டார். விழுந்த விளக்கு அணைந்துபோனதால் அக்கூடமெல்

லாம் இருட்டிவிட்டது. கைகால் தடுமாற்றங்கொண்டு கீழே விழப்போனவர் தற்செயலாய் ஒரு கதவின் பிடியை பிடித்துக்கொண்டார். உடனே கதவைத் திறந்து உள்ளே பிரவேசித்தார். நல்ல வேளையாய் அவ்வுள்ளானது, பிரபு அநங்கன், ஜில்லா அதிகாரி, தன்னைச்சேர்ந்த சந்நியாசிகள், அப்போது சில நிமிஷங்களுக்கு முன் அவர்களோடு சேர்ந்த பிரபு புஷ்யமித்திரரை யுடையதாயிருந்தது.

நித்யாநந்தர் வந்த மாதிரியைக் கண்ட ஒவ்வொருவரும் பிரமையடைந்தார்.

"என்ன நடந்து விட்டது! என்ன நடந்து விட்டது!" என்று ஒவ்வொருவரும் கேட்கத்தலைப்படவே, "ஐயோ பயங்கரமானது, பயங்கரமானது, இறந்துபோன பிரும்மாநந்தனது பூதரூபத்தைப் பார்த்தேன்" என்று சந்நியாசிகளைப் பார்த்துச் சொன்னார். பிரும்மாநந்தர் கதையை பிரபு புஷ்யமித்திரரைத் தவிர மற்றெல்லாரும் சந்நியாசிகளிலொருவர் மூலமாய்க் கேட்டிருந்ததால் அவர்களெல்லோரும் திகைத்துப்போய் விட்டார்கள். பிரபு புஷ்யமித்திரருக்கும் சங்கதியைச் சுருக்கமாய்ச் சொல்லவே, அவரும் வியப்படைந்தார்.

42 - வது அத்தியாயம்.

நித்யாநந்தர் ஸர்வஜித்தை விட்டுவிட்டுப்போன அரைமணி நேரத்திற்கெல்லாம், பிரபு புஷ்யமித்திரர் அவனது அறையிற் பிரவேசித்தார். வந்தவர் அந்த இடத்தைப்பார்த்து விட்டு வெறுப்புக்கொண்டு "இந்த இடத்திலேயே உன்னை நான் கடைசியாகப்பார்க்கவேண்டும்" என்றார்.

"எனது உபகாரியே, எனது தகப்பனுக்கு மேலானவரே, நீங்கள் என்னை குற்றவாளி அல்லவென்று நினைத்தாற்போதும்; இவ்விடம் ரௌரவாதி நரகங்களுக்கு மேற்பட்டிருந்தாலும், இதை ஸ்வர்க்கமாக எண்ணிக்கொள்ளுவேன்" என்று சொல்லிக்கொண்டே அவருக்கு மரியாதையாய் கை கூப்பி எழுந்து நின்றான்.

"ஏ ஸர்வஜித் நான் எதை நினைக்கிறதென்று எனக்குத் தெரியவில்லை? பிரபு அநங்கரும அவருடைய காரியஸ்தனும் பொய்சொல்லியிருந்தால் தான் நீ குற்றவாளியல்லவென்று நினைக்க இடமிருக்கிறது. அவர்கள் பொய் சொல்லுவதற்கோ சிறிதும் நியாயமில்லை—"

"பிரபுவே, நான் சொல்லுவதைக் கேளும், எனக்கோ மரணம் சமீபித்து விட்டது; தூக்குமரம் நடப்பட்டு எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது; குருமார்களோ எனது உத்தரக்கிரியைகளுக் கொத்த ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்; நேரமோ நெருங்கிவிட்டது; தாங்களும் என்னைக் கடைசியாகப் பார்த்து விட்டுப்போக வந்திருக்கிறீர்கள். இனி நாமிருவரும் இவ்வுலகத்தில் சந்திக்கப்போகிறதில்லை. இம்மரணத் தருவாயிலிருக்கிற நான் பொய் சொல்லுவதில் பயனில்லை; நான் சற்றுநேரத்திற்கெல்லாம் ஈசுவர சந்நிதியை அடைவேன். அவ்வீசுவர சாக்ஷியாகச் சொல்லுகிறேன். நான் ஒருகுற்றமுஞ் செய்யவில்லை. பிரபு அநங்கனும் வரதனும் கர்ணகடோரமான பொய்களைச் சொல்லிவிட்டார்கள். இதுதான் உண்மை" என்றான் ஸர்வஜித்.

"ஐயோ, ஐயோ, ஏ ஸர்வஜித், நீ குற்றவாளியல்லவென்றறிய நான் ஆசைப்படுவதை பகவான் அறிவார். ஆயினும் அத்தாக்ஷிகளெல்லாம் விரோதமாயிருக்கின்றனவே—"

"பிரபுவே, குழந்தைப்பருவம் முதற்கொண்டு என்னைத்தாங்கள் வளர்த்து வந்திருக்கிறீர். உலகத்திலுள்ள மற்றெவரைக் காட்டிலுங் என் குணத்தை தாங்கள் நன்றாயறிவீர். தாங்கள் என்னிடத்தில் அயோக்கியத் தனத்தையாவது—பாசாங்கையாவது—துரோகத்தையாவது கண்டிருக்கிறீர்களா?

"இல்லை, ஒருக்காலுமில்லை. அதாவது எனக்குத் தெரியாமல் இரகசியமாய் எனது புத்திரியின் மனதைக்கவர எத்தனித்தவரையில் ஒன்றுமில்லை. ஆனால் இதைப்பற்றி நாம் பேசவேண்டாம்—"

"அதைப்பற்றிப் பேசவேண்டியதில்லை தான். ஆனால் நான் சீமாட்டி லீலாவதியிடத்தில் பிரிய வார்த்தைகள் பேசினதை ஒரு துரோகமென்று நினைத்து என்னை தாங்கள் நம்பவில்லையென் றறிகிறேன்.

"ஸர்வஜித், நான் இங்கு வந்ததின் நோக்கம், நீகுற்றஞ் செய்திருந்தால் உன்னை மன்னித்து விடலாமென்றே யொழிய துக்ககரமான பழைய விஷயங்களைக்குறித்துப் பேசுவதற்கல்ல".

"ஆயினும், நான் சாவதாயிருந்தால், என் உபகாரியாகிய தாங்கள் தங்களுடைய மகனது கொலையாளியாக என்னை நினைக்கவில்லையென் றறிவது என் மனதிற்குப் பரமாநந்தமாயிருக்கும்"

"ஐயோ, என் மகனே, என் மகனே, ஏ ஸர்வஜித், உன் முன்னிலையில் யாரைக்காண்கிறாய் தெரியுமா? என்மகன் இறந்ததால் எல்லாவற்றையும் இழந்தவனாக விருக்கிறேன். எனது ஜீவனும் போய்விட்டதாக வைத்துக் கொள்ளலாம். நான் நடமாடும் சிலையே யொழிய, பழைய புஷ்யமித்திரனல்ல—"

"ஐயோ, பிரபுவே, உங்கள் வார்த்தைகள் கூரிய அம்புகளைப்போல் என்னைத்தைக்கின்றனவே. ஐயோ நான் மகாபாதகன். நான் தங்களது பெண்ணிடத்தில் ஆசைவார்த்தைகளைச் சொல்லியிராவிட்டால், நடந்த சம்பவங்களெல்லாம் மனதுக்குச் சந்தோஷத்தைத்தரத்தக்க வேறுவிதமாக நடந்திருக்குமே ஐயோ—"

"அடே படுபாவி, அப்படியாகில் உன்குற்றத்தை ஒப்புக்கொள்ளுகிறாய். இப்போது கடைசிதருவாயில், உன்மேல் சாட்டப்பட்டிருக்கிற குற்றங்களைச் செய்ததாக ஒத்துக்கொள்ளுகிறாய். நீ இதுவரையில் பிடிவாதமாய் பொய் சொல்லிக் கொண்டுவந்தது உன்னை எவ்வளவு அயோக்கியனென்று வெளிப்படுத்துகிறது."

இப்பிசகான எண்ணத்தோடு புஷ்யமித்திரர் ஆவேசங்கொண்டவர் போல் எழுந்திருக்க, அவர் தலையில் ஒரு கிரு கிருப்பு உண்டாய் விட்டது. கீழே விழப்போகும்போது எதையாகிலும் பிடித்துக் கொள்ளலாமென்று கைகளை எல்லாப் பக்கத்திலும் நீட்டினார். ஒன்றும் தட்டுப்படாததால் கீழே பலமாய் விழுகையில், அவர்தலை வேகமாய் சுவற்றில்மோதிற்று. மூர்ச்சித்து விழுந்தார்.

சொன்ன வார்த்தைகளை பிசகாய் அர்த்தஞ் செய்து விட்டாரேயென்று உன் மத்தங்கொண்டு, ஸர்வஜித் கதவண்டை ஓடிகதவைத்தட்டினான். பாராக்காரர்களில் நாலைந்து பேர் ஓடிவந்து, பிரபு புஷ்யமித்திரர் இருந்த நிலைமையைக் கண்டு அவரைத்தூக்கிச சென்றார்கள.

ஸர்வஜித் மறுபடி தனித்திருந்தான். பிரபு புஷ்யமித்திரரோடு கடைசியாக சம்பாஷித்தல் தேறுதலாக முடியுமென்றவன் எண்ணியிருக்க, அது புண்படுத்திக் கொண்டிருந்த வேதனையைக் கொண்டுவந்து விட்டது. தனது வார்த்தைகளின் கருத்து ஒன்றாயிருக்க, புஷ்யமித்திரர் கொண்ட சம்சயங்களை யெல்லாம் உறுதிப்படுத்தும்படி முடிந்தனவே என்று நினைக்கையில் அவன் மனம் சகிக்கவில்லை. நெருப்பில் காய்ந்து கொந்தளிக்கிற வெந்நீர்போல உஷ்ணமாயிருந்த கண்ணீர்கள் தாரை தாரையாகப் பெருகிவந்தன. இப்படி எவ்வளவு நேரம் இருந்தானோ அவனுக்குத் தெரியாது. ஆனால் உட்கார்ந்திருந்தவன் தாவி யெழுந்திருந்தோடி கதவைத் தட்டினான். பாராக்காரரில் ஒருவன் வந்தான். பாராக்காரனைப் பார்த்து ஸர்வஜித் "அப்பா, உன்னைக் கெஞ்சுகிறேன். இந்த உபகாரஞ்செய், பிரபு புஷ்யமித்திரருக்குப் பிரக்ஞை வந்திருந்தால், அவரை நான் இங்கு வரும்படி கெஞ்சினதாகச் சொல், அல்லது என்னை அவரிடத்தில் இட்டுக்கொண்டு போ. என் கைகால்களை வேணுமென்றாலும் கட்டிவிடுங்கள். எனது வேண்டுகோளைப் பூர்த்திசெய்தால் போதும்" என்றான். உடனே அவன் வேறொருவனை அங்கே நிறுத்தி விட்டு புஷ்யமித்திர ரறைக்கு விரைந்து சென்றான். சில நிமிஷங்களுக்குள் திரும்பி வந்து பிரபு மூர்ச்சித்தபடியே இருக்கிறாரென்று சொன்னான். ஸர்வஜித்தும் தனது சிந்தனைகளுக்கு விடப்பட்டான்.

அச்சிந்தனைகளோ அவனது நெஞ்சை கருக்கறிவாள் அறுக்கிறது போல் அறுத்துக் கொண்டிருந்தன. காலமோ நெருங்கிக்கொண்டிருந்தது. மணியோ சமீபித்துக் கொண்டிருந்தது. பிரபு புஷ்யமித்திரருடைய மனதை யாவது திருப்பலாமென்று நினைத்தான். அந்த ஆறுதலும் போய்விட்டது. என்னென்னவோ சொல்லலா மென்று எண்ணியிருந்தேனே. அவரது மனதை தனது விஷயத்தில் அநுதாபப்படும்படி செய்வதோடுங் கூட, லீலாவதிக்குப் பல சங்கதிகளைச் சொல்லி யனுப்பலா மென்று எண்ணியிருந்தேனே. அதற்கும் இடமில்லாமற் போய்விட்டதே" என்று மனது உறுகிக்கொண்டிருக்கையில், சந்நியாசிகளில் சிலர் ஸர்வஜித்தைச் சிறு கோயிலுக்குக் கூட்டிக் கொண்டு போவதற்காக வந்தார்கள். உடனே கண்ணீர்களை உதறி யெறிந்து துடைத்து விட்டு நின்றான். வந்த சந்நியாசிகளில் நித்யாநந்தரும் இருந்தார். உடனே அவர் ஸர்வஜித்தின் கையை அன்புடன் பிடித்துக்கொண்டு திரும்பினார். கடைசியாக எல்லாரும் சிறு கோயில் சேர்ந்தார்கள்.

ஈ. கே. சிவசுப்பிரமணிய ஐயர், பி-ஏ.

இல்லாள் கடமை.

All Rights Reserved.

இக்காலத்தில் பெண்கள் கல்வியைப்பற்றி படிப்பில் தேர்ந்தோரும் கவர்ன்மெண்டாரும் பத்திரிகாசிரியர்களும் மிகவும் ஊக்கத்துடன் முயற்சி யெடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஆகையால் பெண்களுக்கு எப்படிப்பட்ட

கல்வி யளிக்கவேண்டுமென்பதைப்பற்றி யோசனை செய்யவேண்டியது அவர்களின் கடமையாயிருக்கிறது. ஆண் பள்ளிக்கூடங்களில் கற்றுக்கொடுக்கும் எண்ணுமெழுத்துமே கண்ணெனத் தகுமாகையால் இவர்களுக்கும் சாலவும் உரித்தென்று நினைத்து இவைகளுடன்கூட பாட்டும், தையலும் படிப்பிக்கிறார்கள். ஆனால் இவர்கள் வயது வந்தபிறகு நடந்துகொள்ளவேண்டியதற்குத் தக்க படிப்பு ஒன்றும் படிப்பிக்கிறதாக ஏற்படவில்லை. இல்லாளான பிறகு நடந்து கொள்ளவேண்டியதற்கு, தன் வீட்டில் வயதில் முதிர்ந்த தன் தாய் முதலிய பிரமதா சிரோமணிகளின் புத்திமதியே இவர்களுக்கு இல்லறத்துக்குரிய படிப்பாக இருகிறது. இப்படிச்செய்வதால், எப்படியானால் மத்தியதரப்படிப்புள்ள நம் சிறுவர்களில் அநேகர், நம்முடைய தேசாசார சுபாவங்கள் அக்கிரமம் அலலது தற்காலத்திற்கு தகுந்தவைபல்ல என்கிற எண்ணத்துடன், இல்வாழ்கை நடத்த எத்தனிப்பார்களோ, அப்படியே, சாதாரண மத்தியதரப்படிப்புள்ள பெண்களும் தங்கள் இல்லறதருமத்திற்கும் தங்கள்படித்ததற்கும் சம்பந்தத்தைக் காணாமல், படித்தது ஒன்றும்பிரயோசனமில்லாமல் தனக்கு தோன்றினவாறு இல்லறத்தை நடத்தவாவது, அலலது தன் இல்லற தருமத்தை மறந்து படித்ததற்கு அனுகுணமாக இல்லற தருமங்களை மாற்றவாவது முயற்சிக்கிறார்கள். ஏனெனில், சுவல்ப படிப்புள்ள பெண்கள் கல்வியின் குறைவால் பேதமையை அணிகலமாகக் கொளகிறார்கள். அதிகமாக படித்தவர்களோ அவரவர்கள் அதிர்ஷ்டப்படி புத்தியின் சூக்ஷ்ம திருஷ்டியால் சீர்திருத்திக்கொள்ளுகிறார்கள். மத்தியதரப் படிப்புள்ள பெண்களோவென்றால் ஒருபக்கத்தில் எப்பொழுதாவது ராமாயண, பாரதமுதலான இதிகாஸ கதையையும், ஒருபக்கத்தில் இப்பொழுது கடைத்தெருவில் பணம்சம்பாதிக்க எழுதி அச்சியற்றி விர்க்கப்படும் நாவல் கதைகளையும் படித்துவிட்டு, தங்களது உயர்ந்த ஒழுக்கம் இன்னதென்று தெரியாமல் இருக்கிறார்கள்.

இவைகள் எப்படியிருந்தபோதிலும் தங்கள் பெண்களுக்குப் போதிக்கும்பொருட்டு மாதாகளுக்கும், பாடசாலைகளில் மாணவிகளுக்கு கற்பிக்கும்பொருட்டு உபாத்தியாயர்களுக்கும், உதாகரண உருவமாய், படிக்கும் சிறுமிகளுக்கு எடுத்துரைக்கும் பொருட்டு நவீனங்களின் ஆக்கியோன்களுக்கும் ஒரு தருமமுறை (Ideal) இருத்தல்வேண்டும். அதற்கு இந்த காலத்திற்குச் சற்று முன் இருந்தது அவ்வளவு இக்காலத்திற் கேற்றதல்லவென்று சொல்வர் பலருளர். மேற்றிசையோரின் தருமமுறை நமக்கு அவ்வளவு உரித்தனவல்லவென்று பலரும், அதை நாம் எவ்வளவு அனுஷ்டிக்கலாமோ அவ்வளவு அனுஷ்டிக்கலாமென்று சொல்வர் சிலருமுண்டு. மாதரின் இல்லற நிலைமை விஷயமாய், இத்தேசத்தாரின் கொள்கையே சிலாக்கியமென்று, நன்றாய் கவனித்துப்பார்த்த மேற்றிசையோரில் அநேகர் விளம்பியிருக்கிறார்கள். அதுநிற்க, நம்முடைய தேசகுணமும், நடக்கையும், (Nationality) அந்நியரை உவமிப்பதால் கெட்டுவிடுமென்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே.

இவைகளெல்லாம் இப்படியிருக்க நம்முடைய தேசத்திலேயே கொஞ்சநாளைக்கு முன்னிருந்த பூர்வாசார மென்னவென்று விசாரித்தவர்கள் மிகவும் சுவல்பமென்று தோன்றுகிறது. ஆகையால் இந்த விஷயத்தில் நாம் சற்று பரிசிலனைசெய்து, இதே மாதிரி மாதரின் இலலற ஒழுக்கத்தைப்பற்றி நம்

முன்னோர்களும்தீர்க்காலோசனைசெய்து ஒழுக்கமுறைமைகள் ஏற்படுத்தியிருந்தால், அவற்றை எடுத்து அவற்றில் எவை இந்த காலத்திற்குக்கூட தகுந்தவையாக ஏற்படுகின்றனவோ அவற்றை நாம் அனுஷ்டிப்பதில் எல்லோருக்கும் சந்தோஷமும் உத்ஸாகமும் உண்டாகுமென்று நம்புகிறோம்.

நம்தேசத்தில் தொன்று தொட்டு புருஷார்த்தங்கள் அதாவது இவ்வுலகத்தின்கண் ஒவ்வொரு சரீரியும் தேடவேண்டிய பொருள்கள் நான்கென்று கூறப்பட்டுள. அவையாவது: அறம், பொருள், இன்பம், வீடு இவைகளே. இவற்றில் ஒவ்வொன்றையும்பற்றி விவரிக்கும் விசேஷமான கிரந்தங்கள் இருக்கின்றன. இவற்றுள் இன்பமென்பது ஸ்திரீபுருஷர்களால் ஒருவருக்கொருவர் ஏற்படவேண்டிய இன்பங்களாம். இதிலேயே ஸ்திரீ புருஷர்களுக்குரிய இல்லற தருமங்களும் அடங்கியிருக்கின்றன. இத்தகைய இன்பத்தை மேற்றிசையார் ஒரு புருஷார்த்தமாக ஒப்புக்கொள்ளவில்லை. நம்முடைய தேசத்திலோ அனுபவமில்லாமல்,ஞானமும் வைராக்கியமும் கிடைக்காதாதலால் இல்லற நிலைமை அதாவது மணம்பெற்ற நிலைமை ஒவ்வொரு புருஷனுக்கும் ஸ்திரீக்கும் அவசியமென்றார்கள் முன்னோர்கள்.

இந்த ஸ்திரீ புருஷ தருமத்தைப்பற்றிய பிரதான கிரந்தம் காம சூத்திரமே. இதை தற்காலத்தில் காம சாஸ்திரமென்றுபொய்ப் பெயரால் உலகத்தின்கண் மனுஷியர்களின் காமப்பெருக்கை மட்டும் புகழும் நூலாக எண்ணக்கூடாது. எந்த போதனையால் இன்ப விஷயங்களிலும் முறைமையும் மேன்மையும் கிடைக்குமோ அப்போதனைகள் இந்த சூத்திரங்களில் கண்டிருக்கின்றன.

இந்த நூலின் நடுவே பாரியை நடந்துகொள்ள வேண்டியதைப்பற்றி ஒரு அதிகரணமுண்டு. அதைச் சற்றுபடிப்போர்களுக்கு விளங்கும்படி அடியில் விவரித்து உரைக்க முயலுகிறோம். இதைப்படித்த பிறகு நம்முடைய மாதர்கள் தாம் நடக்கவேண்டிய முறைமைகள் நம்முடைய தேசத்திற்கும் பூர்வாசாரத்திற்கும் தத்கால நிலைமைக்கும் உரித்தாகவே இருக்கலாமென்று அறிந்து அந்தப்படி நடந்துகொள்ள எத்தனிப்பார்களானால் நாம் இதையெழுதியதில் கிருதார்த்தர்களாவோமென்பது திண்ணம்.

1. சூத்திரம்:—ஒருமியான பாரியை நிலைபெற்ற விசுவாசத்துடன் கடவுளைப்போல் பதியை பரிசரிக்கவேண்டும்.

விளக்கம்:— எத்தேசத்திலும்எந்த ஜாதியிலும்ஸ்திரீகள்ஒருசமயத்தில் ஒரு கலியாணத்திற்குமேல் செய்துகொள்ள இடமில்லை. நம்முடைய தேசத்திலும் இன்னும் சில தேசங்களிலும் புருஷர்கள் மட்டும் ஒரே காலத்தில் ஒரு மனைவிக்குமேல் மணம் புரிந்துகொள்ளலாமென்கிற வழக்கமிருக்கிறது. அப்படி ஒரு காலத்தில் பல மணம்புரிந்த புருஷனுடைய பெண்டீர்களைப் பற்றி இங்கே சொல்லப்படவில்லை. ஒருமி என்றதால், சக்களத்தியற்ற மனைவியென்ற அருத்தம்கொள்ளும். பாரியை என்றதால் மதாசாரப்படி யதோக்தமாய் புருஷனால் பாணிக்கிரகணம் செய்யப்பட்டு மணம்புரிந்தவள் என்று அருத்தமாகிறது. அவள் எப்படியிருக்கவேண்டுமென்றால், பதி அதாவது புருஷனிடத்தில் நிலைபெற்ற விசுவாச முள்ளவளாய் பதியைக் கடவுளைப்போல் பரிசரிக்கவேண்டும்.பரிசரிப்பதென்றால்எப்படிநடந்தால் புருஷனுக்கு

நன்மையுண்டோ அப்படி நடக்கவேண்டும். இதற்குக் காரணம் தன் கணவனிடத்தில் நிலைபெற்றிருக்கும் விசுவாசமே. ஏனெனில், கணவனிடத்தில் விசுவாசமில்லாவிடில், கணவனின் அனுகூலத்தை நாடமாட்டாள். கணவனுக்கு இவளால் அனுகூலமில்லாவிடில் ஒற்றுமையிராது. ஒற்றுமையில்லாவிடில் சுகம் பரந்தோடிவிடும். வெகுகாலமாக, புருஷனில்லாமல் ஸ்திரீகளுக்கு சுவயம் கௌரவத்தை கொண்டாடாததினாலேயும், எத்தேசத்திலும் ஸ்திரீயைக் காட்டிலும், புருஷனிடத்தில் திடபராக்கிரமம்புத்தி சாதுர்யாதிகள் அதிகமிருப்பதாக கொள்கையானதாலும் பெண்களுக்கு கணவனே தெய்வமென்கிற கொள்கை. மேலும் விசேஷமாக இந்துமதக்கொள்கையில் கணவனில்லாமல் ஸ்திரீக்கு ஒருவிதமான இல்லற சுவதந்திரமும் இல்லாததால் இச்சூத்திரத்தில் மதக்கொள்கை பிரகாரமும் புருஷனை தேவதையாக ஆக்கியோனான வாத்ஸ்யாயனரிஷி உச்சரித்திருக்கிறார்.

2. சூத்திரம்:—அவர் எண்ணமாய் தன் மனதில் குடும்ப சிந்தையை ஏற்றுக் கொள்ளவேண்டியது.

விவரிப்பு:—அவர்—அதாவது தன் கணவன்: மேற்றிசைய பாஷையில் மனைவியை Better half, அதாவது சரீரத்தில் உயர்ந்தபாதி யென்கிறார்கள். நம்தேசத்தில் "ஜீவிதம் மே துவிதீயம்" அதாவதுஎன்னுடைய இரண்டாவது உயிர் என்கிறார்கள். இவைகளுக்கு காரணமென்ன? முன் சூத்திரப்படிஇவள் கணவனிடத்தில் நிலைபெற்ற விசுவாசத்துடனிருந்து அவனை உபசரிப்பதல்லவா? உபசரிப்பதென்றாலென்ன? சரீரசுகத்தைதருவதா? சூத்திரகர்த்தா அதைமுக்கியமாகநினைக்கக்கூடாதென்றார்.தாதிருசசுகம்சரீரத்தின்சகஜதருமம் நமக்கும்வாயில்லாதஜடாங்மாக்களாகியமிருகங்களுக்கும்உள்ளதே.ஆகையால் அதையே ஆரம்பமும் முடிவுமாக நினைக்காதே என்றார். மேலும் சாஸ்திரங்களில் எவள் மனையில் சாமர்த்தியமுள்ளவளோ அவளையே பாரியை அல்லது மனைவியாக சொல்லப்பட்டிருக்கிறது. சாமானியமாய் புருஷர்கள் சம்பாதிக்கிறார்கள். பானைப்பிடித்தவள் பாக்கியவதி என்கிற வசனபிரகாரம் சம்பாதிக்கவும் சம்பாதித்ததைக் காப்பாற்றி நற்சிலவு செய்யவும் பெண்டீர்களுக்கே ஏற்றபொறுப்பு. ஆகையால் இவள் குடும்பத்தின் அதாவது இல்லத்தின் எண்ணத்தை மனதில் ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். அப்படி ஏற்றுக்கொள்வது,என்? அவர் எண்ணமாய்—அதாவது கணவனின் சுகத்தை, தான் சற்று பாரத்தையும் கவலையையும் ஏற்றுக்கொண்டு, விருத்தி செய்யவும், அதன் மூலமாய் தங்களுடைய ஒற்றுமையை ஏற்படுத்திக்கொளளவும். இவளுக்கும் குடும்பபாரம்சிரமமே. இருந்தபோதிலும் அவர் எண்ணமாய் இவள் பாரத்தை ஏற்றுக்கொள்வது சகஜமே. எப்படி பலவிதத்திலும் புருஷனால் காப்பாற்றப்பட்டு இன்பத்தை யடைகிறாளோ அப்படியே அவர் கஷ்டங்களிலும் தான் தலையிட்டுக் கொள்ளுகிறது சகஜமில்லையா? கஷ்டமில்லாமல் சுகமுண்டா? நமக்கு நன்மைதேடுபவர் பாரத்தை வகித்து கிலேசப்படும்பொழுது பார்த்துக்கொண்டு சும்மாயிருக்கவும் மனம் கல்லா? ஆகையால் அவர் எண்ணமாய் குடும்பசிந்தையை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றார். எதற்காக என்றால், அவர் எண்ணமாய்—அதாவது அவர் நன்மையின்பொருட்டு. அவர் கெடுதலின் பொருட்டல்ல. இந்த விசேஷார்த்தத்திற்கு விசேஷ காரணம் அமைப்பது சுலபமே. இருந்தபோதிலும் கணவன்

அபிப்பிராய மில்லாமல் இவர் குடும்பத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமா? என்றால், இவர் எண்ணமாய்த்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும்: அவர் அனுமதி யில்லாமல் ஏற்றுக் கொள்ளக் கூடாது: இருந்தபோதிலும் இவள் மனைவி யென்பதற்கு அடையாளம் குடும்ப சிந்தையை ஏற்றுக் கொள்வதே ஆகையால், ஆசாரியர் சொற்படி இவள் குடும்ப சிந்தையை மேற் கொள்ள வேண்டியது இவள் கடமை: ஆனால் அதை அவள் தன் கணவன் அனுமதி பூர்வகமாய் மேற் கொள்ள வேண்டும்: ஆகையால் இவள் அதற்கு கணவன் அனுமதியை அடையவேண்டும்; அதற்கு வேண்டிய முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் தோன்றுகிறது: ஆகையால் கணவனுக்கு, இவள் விஷயத்தில் இவள் குடும்ப சிந்தையை ஏற்றுக்கொள்ளத்தக்கவள், இவளுக்கு ஏற்றுக்கொள்ள ஆசையுமிருக்கிறது. ஏற்றுக்கொண்டால் சரிவர நடந்து கொள்வள் என்கிற நிச்சயபுத்தி ஏற்படவேண்டும். அதற்குத் தகுந்தவாறு இவள் கணவன் அபிப்பிராயப்படி தான் நடக்கக்கடவளென்றும், கணவன் க்ஷேமத்தையே கோறுகிறாளென்றும், கணவன் நன்மைக்காகத் தான் குடும்ப சிந்தையை ஏற்றுக்கொள்ள விரும்புகிறாளென்றும், குடும்பச் சிந்தையை ஏற்றுக்கொள்ள தனக்கு யோக்கியதை இருக்கிறதென்றும், குடும்பத்தின் தருமங்களும் தன் கணவன் குடும்பத்தின் விசேஷமான ரகஸிய தருமங்களும் தானறிந்திருப்பதுடன், அந்த ஞானத்தினால் புருஷனுக்கு நிர்மதியும், சுகமுண்டாகும்படி தான் குடும்ப தருமத்தில் மனதை செலுத்துவதுடன், ஸ்திரீகளுக்கு இயற்கையான சபலஸ்வ பாவமில்லாமல் இதில் ஸ்திரமான புத்தியை யடைவளென்பதையும் தன் கணவனுக்கு காண்பித்துக்கொண்டால், கணவன் இல்லறத்தில் இவள் கூட்டுறவை நன்கு மதித்து உபயோகித்துக் கொள்ளாமலிருப்பானோ?

கே. எஸ். பத்மனபயர், பி. ஏ. எல். டி.

அவர்கள் செய்தது சரி.

நிலவு வெளிச்சத்தில் பார்வதியும் இன்னும் சில பெண்மணிகளும் ஆடிக் கொண்டும் பாடிக்கொண்டுமிருந்தார்கள். பார்வதி புத்தியுள்ளவள். நாலாவது வகுப்பில் செவ்வனே படித்துவருகிறாள். இவள் தாய் லக்ஷ்மி அம்மாளுக்கு சம்ஸ்கிருதத்தில் பாண்டித்யமுண்டு. தமிழும் வாசிக்கவும் எழுதவும் தெரியும். தனக்கு ஒழிந்த நேரத்தில் தனது ஒரே புத்திரிக்கும் புத்திரனுக்கும் நல்ல கதைகளைச் சொல்லிக்கொண்டு வருவாள். இப்படிச் செய்து வந்தமையால் அவர்கள் நல்லகுணமுடையவர்களாள சிறுவயதிலேயே பெயரெடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். லக்ஷ்மிஅம்மாள் தர்மம்செய்வதில் கர்ணன் என்றே சொல்லலாம். இவளுடைய கணவரும் அப்படியே. ஆயினும் இவர்களுக்குள்ள ஆஸ்தியோ சுமார் ரூபா-15,000 மதிப்புள்ள பூஸ்திதிதான். இதன் வரும்படியைக் கொண்டு கூடியவரையிலும் சிக்கனமாக குடும்பத்தை மனைவியும், கணவனும் நடத்திவந்தார்கள்.

பார்வதிக்கு வயது 12 ஆய் விட்டது. விவாகம்செய்யவேண்டு மென்று தாய் தந்தையர்கள் யோசித்துக் கொண்டிருக்கும்பொழுது திடீரென அப்பு

வாத்தியர் இவர்கள் வீட்டிற்கு வந்து யோகக்ஷேமங்களை விசாரித்துவிட்டு விளையாடிக்கொண்டிருக்கும் பார்வதிக்கு இன்னும் விவாகம்செய்விக்காமலிருப்பது சாஸ்திரவிரோதமென்றும் இவ்வருஷம் விவாகம் செய்து முடிக்காவிடில்தான் இனி அவர் வீட்டிற்குப் புரோகிதராயிருக்க முடியாதென்று தயைதாக்ஷிண்யமின்றி சொன்னார். இதை அண்ணாசாமி சாஸ்தியார் கேட்டு, நீர் சொல்வது சரி, ஆனால் தகுந்தவரன் கிடைக்க வில்லையே! என்ன செய்கிறது? நீங்களும் உதவியொன்றும் புரியாமலிருக்கின்றீர்கள்" என்றார். அப்படியானால் கோபால ஐயருக்கு ஒரு புத்திரனுண்டு. அவன் பி. ஏ. வகுப்பில் சென்னையில் படிக்கிறான். அவனுக்கு வயது-18 இம்மாதத்துடன்முடிகிறது. ஆனால் கையில் ரூபா 2000மும்,அவனை பி.எல். வரையுயிலும் படிக்கவைப்பவாகளின் பெண்ணை தமது குமாரனுக்கு விவாகம் செய்து வைப்பதாகச் சொல்லுகிறார். உங்கள் சம்மதமென்ன என்றார்.

ரூபா 2000-ம் கொடுத்து பி. எல். பரிக்ஷைக்கும் படிக்கவைக்கவேண்டுமானால் மிகக் கஷ்டம். வேறு வரன் ஏதாவதிருந்தால் சொல்லும்.

எனக்குத் தெரிந்தமட்டில் வேறு வரன் ஒன்றுமிருப்பதாகத் தெரியவில்லை. இவ்வரத்துக்கோ அநேகர் போட்டிபோட்டுக்கொண்டுரூ. 1000, 1200, 1500 ரூபா வரையிலும் கொடுப்பதாக மேல்விழுந்துக்கொண்டிருக்கிறார்கள்! இது தவறினால் இவ்வருஷம் உமது பெண்ணுக்கு விவாகம் செய்து வைக்க முடியாது. தாங்கள் கஷ்டத்திற் குள்ளாவீர்கள் என்றார் புரோகிதர்.

புரோகிதரே, நான் யோசனை செய்து சொல்லுகிறேன். தாங்கள் நமது கிரகத்தில் இன்று போஜனம் செய்துவிட்டுப் போகலாமே என்றார். உடனே இவருடைய மைத்துனர் கோயம்புத்தூரிலிருந்து வந்தார். அவருடைய யோக க்ஷேமங்களை விசாரித்த பின் யாவரும் ஸ்நாநம்செய்து போஜன முண்ணச் சென்றார்கள்.

இவர்கள் புசித்துக் கொண்டிருக்கும்பொழுது வைகை. தீரத்திலுள்ள கங்காதர ஐயரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. இவர் நம் சாஸ்திரியாருக்கு அத்தான். அதில் மஞ்சள் தடவி யிருந்தமையால் சுபவிஷயம், பரவாயில்லை. போசனமுண்டபின அதைப் பார்க்கலாமென்று சொல்லிவிட்டு யாவரும் புசித்தார்கள். இவர்மனைவி இவர்களுக்கு வேண்டியவைகளை தாராளமாகப் பரிமாறினாள்.

யாவரும் போஜன முண்டபின் முதல் கட்டில்வந்து இரத்தினக் கம்பிளியில் உட்கார்ந்தார்கள். பார்வதி ஒரு தட்டில் தாம்பூலம் எடுத்துக்கொண்டு வந்து யாவருக்கும் கொடுத்தாள். ஊரிலிருந்துவந்த கடிதாசியை சாஸ்தியார் உடைத்துப்பார்த்தார். அதில தமது ஊரில் ஒருவரனிருப்பதாகவும் ரூ1000ம் கேட்பதாகவும் எழுதியிருந்தது. பையன் வயது 17 என்றும் எப். ஏ. வகுப்பில் படிப்பதாகவும் குறிக்கப்பட்டிருந்தது. சாஸ்திரியார் தமது மைத்துனரைக் கேட்க, அவர் பையனைப்பார்த்து வரவேண்டும். அவர்கள் யோக்யதை முதலியவைகளையும் அறிந்து வரவேண்டும். நான் நாளையதினம் புறப்பட்டு அவ்வூருக்குச் சென்று எல்லா விஷயங்களையும் அறிந்து வருகிறேன் என்றார்.

அவ்விதமே செய்யும் என்றார் சாஸ்திரியார்.

மறுநாள் சாயங்கால வண்டிக்குப் புறப்பட்டார் மைத்துனர். மறுநாள் மதுரை போய்ச் சேர்ந்து அந்தப் பையனுடைய தாய் தந்தையர்களுடைய ஸ்திதி முதலியவைகளை யறிந்துகொண்டார். அவர்களுக்கு இரண்டு புத்திரர்களும், இரண்டு புத்திரிகளுமுண்டு. இந்தப் பையன் இரண்டாவது புத்திரன் அவர்களுக்கு 2000ரூ விலையுள்ள பூஸ்திதிதானிருக்கிறது. ஆனால் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர். சாதகத்தைப் பார்த்தார். அதுவும் தனது மருமாளின் சாதகத்துக்குப் பொருந்தியிருக்கிறதைக் கண்டு மகிழ்ந்து விவாகமுகூர்த்தம் முதலியவைகளை நேரே நிச்சயம் செய்துகொண்டு சாஸ்திரியாரிடம் வந்து எல்லாவற்றையும் விவரமாய்ச் சொன்னார். தமது தங்கையும் அதிகச் சந்தோஷப்பட்டு இந்த விவாகத்தை முடித்து விடவேண்டும் என்றாள். சாஸ்திரியாரும் அவ்விதமே சொல்லவே, உடனே அவர்களுக்கு ஒரு சுபமுகூர்த்தத்தில் ஒருகடிதம் எழுதி தங்கள் ஊருக்கு நிச்சயதாம்பூலம்,முகூர்த்தம் முதலியவைகளுக்கு வரும்படி கேட்டுக்கொண்டார். அவர்கள் இக்கடிதத்தைக் கண்டு மகிழ்ந்து உடனே புறப்பட்டுவந்தார்கள். நிச்சயதாம்பூலம் நிறைவேறிற்று, ரூ. 1000-மும் கொடுக்கப்பட்டது.

நிற்க, புரோகிதருக்கு மாத்திரம் இவ்விவாகம் சரிப்படவில்லை. ஏனெனில் முதலில் சொல்லிய பையனுக்கு விவாகம் நடந்தால் தமக்கு ரூ.500 கமிஷன் கிடைக்கும், அது இப்பொழுது எப்படி கிடைக்கும்? அதுதான் காரணம், அவர்கள் வீட்டிற்குப்போய் பையன் தகப்பனாரைக் கண்டு ஏன் 1000க்குச் சம்மதித்தீர்கள், 2000ம்கேட்கக்கூடாது? என்றார் ஐயா, எங்களுக்கு 1000ரூகூட தேவையில்லை, ஆனால் எங்கள் குமாரனைப் படிக்கவைக்க பணம் எங்களிடத்திலில்லாமையால் இதைப் பெறவேண்டியிருக்கிறது. இதைக்கூட அப்படியே அவன் பேருக்கு பாங்கியில் போட்டுவிட்டோம் என்றார்கள். புரோகிதர் என்னசெய்வார்? தம்மாலியன்றமட்டும் அவர்கள் மனதைக்கலைக்கப் பார்த்தார். தமது காரியம் கைகூடாததைக் கண்டு கடைசியாக பெண் ருதுவாய்விட்டாற்போல் தோன்றுகிறதென்றார். இச்சமயத்தில் சாஸ்திரியார் மைத்துனரும், அத்தானும் வஸ்திரம் பாத்திரம்முதலியவைகளை வாங்கஅவர்களுடன் யோசனைசெய்யவந்தார்கள். புரோகிதர் கண்ணை விழித்துக்கொண்டு அங்குமிங்கும் பார்த்த வண்ணமாயிருந்தார். மதுரை ஐயர் இவர்களுடன் சிலநேரம் பேசிவிட்டு குழந்தை பெரியவளாய்விட்டாளாமே, இது உண்மையாவென்றார். யார் தங்களுக்குச் சொன்னது ? என்றார்கள். இந்தப் புரோகிதர் தான் என்றார். மைத்துனர் மகா கோபக்காரர். ஆனால் நல்ல எண்ணமுடையவர். உடனே ஓய் புரோகிதரே, எனது மருமாள் ருதுவானாளா ? இது உண்மையாவென்று கேட்டார். மதுரை ஐயர் சும்மாயிராமல் 2000 ரூ ஏன் கேட்கக்கூடாது? 1000ம் மாத்திரம் கேட்டீர்களே என்றும் என்னிடத்தில் புரோகிதர் இப்பொழுதுதான் சொன்னார் எனவே, மைத்துனர் கோபாவேசத்துடன் புரோகிதர் கன்னத்தில் ஓங்கி ஒரு அடி அடித்து கழுத்தைப் பிடித்து வெளியில தள்ளினார்.

உடனே புரோகிதர் அடியைப் பட்டுக்கொண்டு இவ் விவாகத்தை எப்படியாகிலும் நிறுத்தி விடவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு சாஸ்திரியாருக்கு விரோதியாகிய கோவிந்தப்பயரிடம்சென்று தனக்கு நேரிட்ட அவமானத்தைப்பற்றி முறையிட்டுக்கொண்டார். கோவிந்தப்பய்யர் சுமார் 50,000 ரூ. ஆஸ்திக்காரர். ஏதோ சிலவிஷயத்தில் சாஸ்திரியாருக்கும் இவருக்கும் மன

த்தாங்கலிருந்து கொண்டிருந்தது. எப்படியாவது சாஸ்திரியாரை மானபங்கம் செய்யவேண்டுமென்று எண்ணியிருந்தார். அதற்குற்ற சமயம் வாய்த்ததென்று இப்பொழுது எண்ணலானார். ஆனால் சாஸ்திரியாரின் மைத்துனரோ லக்ஷ ரூபாய் ஸ்திதியும் செல்வாக்குமுள்ளவர். அவரைக் கண்டால் எவருக்கும் மரியாதையும்பயமுமுண்டு.

ஆயினும் கோவிந்தப்பய்யர் புரோகிதரைப் பார்த்து "நீர் அவர் வீட்டுக் கலியாணத்திற்குப் போவதில்லையென்றும் அவர்களை சாதிப்பிரஷ்டம் செய்யப்போகிறார்களென்றும் சொல்லிவிடும். பின்னிட்டு பார்த்துக் கொள்வோம்" என்றார்.

புத்தியில்லாத புரேகிதர் அவ்விதமே மற்ற வைதீக சிரேஷ்டர்களிடத்தில் சொல்லவே, சிலர் அவசரமாய் சாஸ்திரியார் வீட்டிற்கு ஓடிச் சங்கதியைச் சொன்னார்கள். இவர் மைத்துனரை வரவழைத்து யாவற்றையும் தீரவிசாரித்தார். பின்பு மைத்துனர் நீங்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். "நான் யாவற்றையும் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்று சொல்லிவிட்டு சம்பந்திகளை வரவழைத்து மற்ற ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தார். சம்பந்திப்பிராமணர் அயலூரானபடியாலும், பரமசாதுவானபடியாலும் இன்னது செய்வது என்று அறியாமையால் திகைத்திருக்கும் தருவாயில் மைத்துனர் என்ன யோசனை செய்கிறீர்கள்? எமது மருமகள் ருதுவாய் விட்டாள்என்று சொன்னதை நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, விவாகம் நடக்கவேண்டியதவசியம். நீங்கள் முன் வைத்தக்காலைப்பின் வைக்காமலிருக்க இஷ்டமா இல்லையா என்று கண்டிப்பாய்க் கேட்டார்.

அவர் "சாஸ்திரத்தில் ருதுவான பெண் மணிகளை விவாகம் புரியலாமென்றிருந்தபோதிலும், உலகத்திற்கு ஒப்பி நடக்க வேண்டியிருக்கிறது" இதுதான் என் மனதை வாதிக்கிறதென்றார்.

வைத்துனர்:—"நீர் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம், நான் உங்கள் குடும்பம் முழுவதையும் காப்பாற்றுகிறேன், பயப்படவேண்டாம்" என்றார்.

மதுரை ஐயர், சரி புரோகிதருக்கு என்ன செய்கிறது?

எங்கள் புரோகிதர் இங்கேவந்திருக்கிறார்.

உங்கள் புரோகிதர் வரமாட்டேன் என்று கலகஞ்செய்து வருகிறாரே. அதற்கென்ன செய்வது? பிராமணர்கள் நமது வீட்டில் நடக்கும் விவாகத்திற்கு வரவேண்டாமா?

மைத்துனர்:—அதற்கென்ன தடை, எல்லாரும் வருவார்கள். எங்கள் மாப்பிள்ளையின் புரோகிதருக்குப் பதிலாக என் புரோகிதர் வந்திருக்கிறார். அவர் போதும். இவ்வூர் வைதீகர்களெல்லாம் நமது வீட்டிற்கு வருவார்கள் என்று சொல்லிவிட்டு கலியாணப் பந்தல் முதலிய காரியங்களைச் செய்து முடிக்க உத்திரவு செய்துவிட்டார். (இன்னும் வரும்.)

விஸ்வாமித்திரர்.

ஸ்திரீகளின் படிப்பைப்பற்றி மிஸ்ஸெஸ் அன்னிபெஸண்ட்.

"கும்பகோணத்தில் ஸரஸ்வதிபாடசாலைஎன்றஒருபெண்பாடசாலையில் பரிசளிக்கும் தினத்தில் அத்தியக்ஷராயிருந்து, மிஸ்ஸெஸ் அன்னி பெஸண்ட் ஸ்திரீகளின் கல்வியைப்பற்றி வழக்கம்போல் ஒருபிரசங்கம் செய்தார். மேல் நாட்டு ஸ்திரீகளுக்கும் இந்திய ஸ்திரீகளுக்கும் வித்தியாச முண்டு. மேல் நாடுகளில் ஸ்திரீகள் புருஷரைப்போல் பல தொழில்களில் பிரவேசிக்கிறார்கள். அவர்களிற் சிலர் விவாகம் செய்து கொள்ளாமலே காலந் தள்ளுகிறார்கள். ஹிந்து ஸ்திரீகளோ குடும்ப சம்ரக்ஷணையே பிரதானமாய்க் கொண்டு கிரகணி என்று பேர் வாங்கி யிருக்கிறவர்கள். இந்திய ஸ்திரீ கையும் குழந்தையுமாயிருப்பதைவிடப் பெருமையும் கௌரவமும் இல்லை. அவளே குடும்பத்துக்கு எஜமானி. அவளிடத்தில் சகலருக்கும் மரியாதையும் பக்தியும் உண்டு. புருஷன் வெளியிற் போய்ப்பொருள் தேடிவர, ஸ்திரீ குடும்பத்திலேயே இருந்து அன்ன பூரணியாய், அன்னத்தைக் குடும்பத்தாருக்குப் பங்கிட்டுப் போடுகிறாள். ஆகையால், மேல்நாட்டு ஸ்திரீகளுக்குள்ள படிப்பு இந்திய ஸ்திரீளுக்கு ஒவ்வாது. இந்தியப் புருஷரும் ஸ்திரீகளும் வெவ்வேறு விதமாய்ப்படிப்புப் பெறவேண்டும். பொதுக்காரியங்கள் செய்யப் பிள்ளைகள் தயாராய் வருவதுபோல, வீட்டுக் காரியங்கள் செய்யப் பெண்கள் தயாராக வேண்டும். ஆகையால், பெண்களுக்கு வீட்டுக் காரியங்கள் செய்வதும், சமையல் செய்வதும், சுகாதாரத்தைக் காப்பதும், குழந்தைகளை வளர்ப்பதும், தையல்வேலை பூவேலை செய்வதும்முக்கியமானதொழில்கள். அவைகளுக்குத் தக்க படிப்பு ஸ்திரீகளுக்குக் கிடைக்கவேண்டும். ஸ்திரீகள் இந்தியாவில் ராஜ்யபாரம் செய்து வந்தபடியாலும் அவர்களிற் பலர் உத்தம குணங்களைக் காட்டி வந்ததாலும், அவர்களுடைய சரித்திரத்தை ஸ்திரீகள் படிக்கவேண்டும். இந்திய ஸ்திரீகள் குழந்தைப் பருவத்திலேயே பிள்ளைகள் பெற்றுத் தங்களுடைய தேக சௌக்கியத்தையும் பிள்ளைகளுடைய ஆயுளையும் காக்க அசக்தர்களா யிருக்கிறார்கள். சிறுவர்களும் பாடசாலைகளில்படிக்கும்போதே தகப்பனாகி விடுகிறார்கள். இதனால் தேசத்துக்குக் கேடுவருகின்றது; வயது முதிர்ந்த பிறகு விவாகம் செய்வதே இதற்கு மீட்சி."

சூரிய கிரணங்களின் சக்தி.

"மூக்குக் கண்ணாடி வில்லை ஒன்றை வெயிலில்காட்டி அதன்கீழ் நம் புறங்கையை வைத்துச் சூரிய பிரதி பிம்பமானது ஒரு சிறு துவாரம் பருப்பளவாகும் வரை கண்ணாடியை அங்கு மிங்கும் தள்ளிச் சரிப்படுத்தினோமானால், உஷ்ணம் பொறுக்கமாட்டாமல் நாம் உடனே கையைச் சரேலென்று இழுத்துக் கொள்கிறோம். நம்கையிருந்த விடத்தில் காட்டு முட்டைப் பொடியையாவது பஞ்சையாவது, நெருப்புக் குச்சியையாவது, அல்லது சுலபமாய்த் தீப்பற்றக் கூடிய எந்த வஸ்துவையாவது வைத்தால் உடனே அது புகைந்து பற்றி எரிவதை நாம் பல முறையும் காண்கிறோ மல்லவா?

இதற்குக் காரணமென்ன? கண்ணாடிக்கு வெளிச்சத்தைத் தன்மூலமாய் விடும்படியான குணம் உண்டென்பது தெரிந்த விஷயமே. ஆனால் அப்பம் போல் நடுபாகம் கனமாயும் ஓரம் சிறுத்தும் இருக்கும் கண்ணாடியின் குணம் என்ன வென்றால், அதன் மீது விழுங்கிரணங்களெல்லாம் அதன் மூலமாய்ச் சென்று மறுபக்கத்தில் சிறிது தூரத்தில் எல்லாக் கிரணங்களும் ஒன்றாய்ச் சேர்ந்து விடுகின்றன. சமகனமான கண்ணாடிப்பில்லையில் இம்மாதிரி உண்டாவதில்லை கிரணங்கள் சிதறாமல் எல்லாம் ஒரே இடத்தில் சேருவதால், அவ்விடத்தில் உஷ்ணம் அதிகமாகிப் பஞ்சு முதலானவைபற்றிக் கொள்ளுகின்றன. பூர்வத்தில் உரோமாபுரியின் அதிகாரம் உலகெங்கும் பரவியிருந்த காலத்தில், உரோமர்களுக்கு எதிரிகளைச் சேர்ந்த 'ஆர்க்கிமிடிஸ், என்னும ஓர் சாஸ்திர நிபுணர், மேற்சொன்னமாதிரியான பெரியகண்ணாடிகளைச் சேர்த்து வெயிலில் வைத்து அவற்றின் உதவியினால், சமுத்திரத்தில் மிதந்து கொண்டிருந்த உரோமர்களுடையகப்பல்களைஎல்லாம் ஓர் நொடியில் கொளுத்தி விட்டாராம். இதைச் சந்தேகிக்க யாதொரு காரணமுங்கிடையாது.

இப்பேர்ப்பட்ட குணம் தண்ணீருக்கும் உண்டென்று இப்பொழுது தெளிவாய்க் காண்பிக்கப்பட்டிருக்கிறது. தண்ணீரின் மூலமாய் நெருப்பு செல்லுமென்று நாம் நம்ப முடியுமா? ஆனால் கண்ணால் கண்டதை நமபத்தானேவேண்டும். ஸர்வில்லியம் ராம்ஸே, என்னும் பிரசித்திபெற்ற ரஸாயன சாஸ்திரி, ஒருநாள் ஒரு தண்ணீர்ப் புட்டியைத் தமது மேஜையின் மீது வைத்துக்கொண்டு தம் மாணாக்கர்களுக்கு உபன்னியாசம்செய்து கொண்டிருந்தபொழுது, சூரிய கிரணங்கள் தண்ணீர் மூலமாய்ச் சென்று ஓரிடத்தில் ஒன்றாய்க் கூடவே, மேஜை திடீரென்று பற்றிக்கொண்டது. அதனால் மேஜையில் ஒரு ரந்திரம் கூட உண்டாச்சுதாம்.''

டாஜ்மஹால் எப்பொழுது கட்டப்பட்டது?

"மொகலாய சக்கரவர்த்தி 1607-ம்வருஷத்தில் தம்மகன் ஷாஜஹானுக்கு நூர்ஜஹான்சகோதரன் புத்திரி அர்ஜ்மாண்ட்பீகம் என்றமும்டாஜமஹாலைக் கல்யாணம் செய்து வைப்பதாகத் தீர்மானித்தார். ஐந்துவருஷத்துக்குப் பிறகு ஷாஜஹானுக்கு இருபதாம் வயதில் விவாகத்தை முடித்துவைத்தார். அப்பொழுது மும்டாஜ் கணவனைவிட 14 மாதங்கள் சிறியவள். அவர்களிருவரும் கூடி வாழ்ந்த 19 வருஷங்களுக்குள் மும்டாஜ் 14 குழந்தைகளைப் பெற்றாள். கடைசியாக 1631-ம் வருஷம் ஜுலைமாதம் 7-ம் தேதியன்று 30-மணிநேரம் பிரசவ வேதனைப்பட்டு அதைச் சகியாமல் இறந்து போனாள். ஷாஜஹானுக்கு வேறிரண்டு மனைவிகளிருந்தாலும், இவள அவர் மனதில் குடிகொண்டதுபோல ஒருவரும்குடிகொள்ளவில்லை.

ஷாஜஹானின் மனத்துயரம்ஒருவாறுசமாதானப்பட்டபின்,பர்ன்ஹாப்பூருக்கெதிரில் தப்தி நதிக்கரையில் ஒரு பூந்தோட்டத்திற்கு மத்தியில்அவள் சவம் புதைக்கப்பட வேண்டுமென்றார். அடுத்த டிசம்பர் மாதம் 1-ந் தேதி பிரேத சின்னங்களைத் தோண்டி யெடுத்துக்கொண்டு, ஷாஜஹான் ஆக்ராவுக்கு 29-ம தேதி போய்ச் சேர்ந்தார்.

ஆக்ரா பட்டணத்துக்குத் தென்பாரிசத்தில் யமுனை நதிக்கரையில் விசாலமான பூமி மாசிங்கின் பேரனாகிய ராஜா ஜெயசிங்கிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டது. கல்மாளிகைகட்ட சிற்ப சாஸ்திரிகள் பிளான்கள் கொடுத்தார்கள். சக்கரவர்த்தி அங்கீகரித்த பிளான் பிரகாரம் மாதிரிக்கு மரத்தில் செய்யப்பட்டது.

1632 - ம் வருஷத்தில் வேலை துவக்கப்பட்டது. 1643-ம் வருஷம் ஜனவரி மாதம் கட்டிடம் பூர்த்தியாயிற்று. இதற்குச் செலவான ரூபாய் 50 லக்ஷம்.

20 வகையான இரத்தினங்கள் டாஜில் இழைக்கப்பட்டன. ஷாஜஹான் மும்டாஜ் இறந்த 12-ம் வருஷத்தில் டாஜுக்குவந்து, லக்ஷம் ரூபாய் வருமானம் வரும்படியுள்ள கிராமங்களை அதன் பாதுகாப்புக்காகவும், அதிலிருக்கும் பக்கிரிகளின் செலவுக்காகவும் மானியமாகவிட்டார்."

முக்கிய அறிக்கை.

நமது பத்திரிகைக்கு சென்ற வருஷத்திய சந்தாவை அநேகர் அனுப்பி உதவி புரிந்ததைக் குறித்து மிகச் சந்தோஷப்படுகிறோம். ஆயினும் சுமார் 100 கையொப்பநேயர்கள் சென்ற வருஷத்திய சந்தாவை யனுப்பவில்லை. ஆகையால் அவர்களும் தயைசெய்து அனுப்பினால் மிக அநுகூலமாயிருக்கும். இவ்விதம் அவர்கள் மணியார்டர் மூலமாக பணம் அனுப்பமுடியாவிடின் மேமீ பத்திரிகை வி. பி. யில் அனுப்பப்படும். அதைப் பெற்றுக்கொண்டு பணம் அனுப்பி உதவி புரிவார்களென்று நம்புகிறோம்.

ஓர் வாராந்தர தமிழ்ப் பத்திரிகை.

உதயபானு என்னும் பெயரியதோர் வாராந்தரதமிழ்ப்பத்திரிகை கூடிய சீக்கிரத்தில் வெளிவருவதாகத்தெரிகிறது. இதுயாழ்ப்பாணம் ம-ா-ா-ஸ்ரீ தே. அ. இராசரத்தினம் பிள்ளை என்பவரால் இயற்றப்படும். பிரஜைகள் அரசினர்பால் அன்புடையராயிருத்தல் வேண்டுமென்பதே இப்பத்திரிகையின் கருத்தாகும். ஆகவே, ஆங்கிலேய இராஜாங்கத்தாரால் இந்தியாவுக்கு உண்டாயிருக்கும் பற்பல நன்மைகளைப்பற்றியும், அன்னோர் சக்ராதிபத்தியத்தின் கீழ் நாம் அடைந்திருக்கும் சிலாக்கியங்களைப்பற்றியும் இப்பத்திரிகை அடிக்கடி எடுத்துக்கூறுவதோடு இந்தியாவின் விருத்திக்கேற்ற பற்பல விஷயங்களைப்பற்றியும் தாராளமாய்ப்பேசும். பத்திராதிபராகிய பிள்ளையவர்கள் எடுத்துக்கொண்ட நற்கருமம் இனிது முடிய ஈசன் அருள்புரிவாராக. பத்திரிகையைப்பற்றிய விபரம் அறியவிரும்புவோர் பின் வருமாறு மேல்விலாசம் எழுதுக. தே. அ. இராசரத்தினம் பிள்ளை, நெ. 4, சாரதவிலாசம், வெள்ளாளத்தெருவு, புரசவாக்கம், சென்னை.

சொஸதமாக்குவதைவிட
வியாதியைத் தடுப்பது நலம்.

நல்ல தேகக்கட்டுள்ள ஒருமனிதன் பிளேக், அம்மை, காலரா, நுரையீரல் முதலிய வியாதிகளுக்குப் பயப்படவேண்டியதில்லை. வியாதி எப்பொழும் பலஹீனமுள்ளவர்களைப் பீடிக்கிறது. அவ்விதமுள்ளவர்களுடைய தளர்ந்த நரம்புகள் அதைத்தாங்குவது கஷ்டம்

SCOTT'S Emulsion

ஸ்காட்ஸ் எமல்ஷன் வியாதியைத்தடுத்து சரீரத்தில் தளர்ந்த நரம்புகளைப் பலமுள்ளவைகளாகவும், சதைகளைப் புஷ்டியுள்ளவைகளாகவும் செய்து வியாதி கிட்ட அண்டாமல் உனக்குச் சக்தியைக் கொடுக்கிறது.

மருந்து உட்கொண்ட பின் இதன் அனுபவம் தெரியும்.

கையினால் தொடப்படாமலே செய்யப்படுகிறது.

எல்லா ஔஷத சாலையிலும் விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்.
ஸ்காட் அண்டு பௌன் கம்பெனி லிமிடெட்.

தயார் செய்கிற ரசாயன கர்த்தர்' லண்டன் இங்கிலாந்து.

புத்தகவரவு.

இளைஞர் தாவரநூல்:—இது வூர்ஹீஸ் காலேஜ் சூபர் வைஸர் மிஸ்டர் எம். சி. ராஜா அவர்களால் எளிய நடையில் பாடசாலைப்பிள்ளைகளும், பெண்களும், விதை முளைத்தல், வேர், அடிமரம், இலை, புஷ்பம், கனியும் வித்தும், விதைகள் ஆங்காங்குப்பரவி முளைக்கும் விதம், செடிகளின் வகை முதலிய அரிய விஷயங்களைப்படித்து சுலபமாக அறிந்துகொள்ளுமாறு எழுதப்பட்டிருக்கிறது. குழந்தைகளுக்குச் சாதாரணமாக ஒவ்வொரு வஸ்துவையும் உற்றுப்பார்க்கும் சக்தியை விருத்தி செய்யவேண்டியது உபாத்தியாயர்களின் கடமை. இங்கிலாந்து முதலிய தேசங்களிலோ இவ்வித கடமை பெற்றோர்களைச் சேர்ந்ததாயிருக்கிறது. நமது பாடசாலைகளிலுள்ள பிள்ளைகளுக்கு தாவரநூல், ஜந்து சாஸ்திரம், முதலியவைகளில் அவர்கள் தினம் பார்த்து வரும் வஸ்துக்களைப்பற்றியே செவ்வனே உபாத்திமார்கள் போதித்து வந்தால் பிள்ளைகளின் அறிவு விருத்தியடையும். நமது பாடசாலைகளிலுள்ள உபாத்தியாயர்களுக்கும் இவ்வித சாஸ்திர சம்பந்தமான புஸ்தகங்கள் மிக நன்மையைப்பயக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் உபாத்தியாயர் இப்புஸ்தகத்தைப்படித்து இதன்படி செடி, கொடி முதலியவைகளைத் தாங்களும், பயிர்செய்வித்து அதன் வளர்ச்சி, உயரம், இலைகளின் அளவு, நிறம், முதலியவைகளைச் செவ்வனே அறிந்துகொள்ளவேண்டும். அவ்விதமே தங்கள் மாணாக்கர்களையும் பாடசாலைகளில் ஓர் பக்கத்தில் தோட்டம் ஏற்படுத்தி அதில் செடி, கொடி முதலியவைகளைப் பயிர் செய்விக்கச்செய்து அவைகளை பூதக்கண்ணாடியைக்கொண்டு பார்த்து வரும்படியும் செய்விக்கவேண்டும். அவ்விதம் செய்யும் ஒவ்வொரு நாள் வேலையையும் ஒரு புஸ்தகத்தில் குறித்துக்கொண்டு வரும்படி கட்டளையிடவேண்டும். இப்படிசெய்து வந்தால் உற்றுநோக்கும் சக்தி விருத்தியடைந்து பிள்ளைகளின் அறிவு விசாலப்படும். இவ்வெண்ணத்தைக்கொண்டே இப்புஸ்தகம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறதென்று எண்ணுகிறோம். இது ஒவ்வொரு எலிமெண்டரி உபாத்தியாயர் கையிலு மிருக்கவேண்டியதவசியம். இதன் விலை அணா 6.

சென்னை, திருவல்லிக்கேணி பைக்ராப்ட்ஸ் ரோடிலுள்ள குருராஜா கம்பனி என்ற சுதேச சாமான்களை வியாபாரம் செய்பவர்கள் மோஹன பல்பொடியை அனுப்பினார்கள். அதை நாம் ஒருமாசம் உபயோகித்துவந்தோம். பல் சுத்தமாயிருப்பதுடன் துர்நாற்றம், வலி, இரத்தம் வருதல் முதலியவைகளையும் சௌக்கியப்படுத்தும் குணம் இதற்கு உண்டு. இதையும் ஒவ்வொருவரும் வாங்கி உபயோகிக்கலாம்.

கல்கத்தா, 23, குலு தோலாதெருவில் வியாபாரம் செய்யும் H. S. அப்துல் கனி அவர்கள் மோஹினி குஸுமதைலம் நமக்கு அனுப்பினார்கள். அதை நாம் உபயோகித்துப் பார்த்ததில் அது வெகு வாசனையுள்ளதாயும் தலைமயிர் வளர்ச்சிக்கு மிக உபயோகமுள்ளதென்று கண்டு மகிழ்ந்தோம். வேண்டுவோர்இங்கிலீஷில் H. S. Abdul Gunny Esq. 23,&73 Colootolah Street, Calcutta வென்று எழுதவேண்டும்.

வியாதி நீங்காது வருந்துவோருக்கு கைகண்ட மருந்து.
எளிதில் சொஸதப்படுத்துகிறது.

அடியிற்கண்ட சொஸ்தமாகாத வியாதிகளினால் கஷ்டப்படுகிறவர்களை உடனே சொஸ்தப்படுத்தும். அநேக பேர்பெற்ற டாக்டர்களால் இம்மருந்து பரிசோதிக்கப்பட்டு அடியில் வரும் வியாதிகளுக்கு இது நல்லமருந்தென்று நன்கு மதிக்கப்பட்டிருக்கிறது. எல்லாவிதசுரம், மலேரியா சுரம், நீண்டமண்ணீரல், பித்தாசயம், மகோதரவியாதி, பிளவை, மேகவெட்டை, கிரந்திப்புண், நீர்ரோகம், வாதம், இரத்தரோகம், முதலியவைகளை இந்த மருந்து சொஸ்தப்படுத்திவருகிறது.

Arayn Sarasaparilla.

ஆரியன்சரசபரிலா என்ற நன்னாரிவேர் சர்பத்து பலவீனர்களுக்கு பலத்தையும் புஷ்டியையும் கொடுக்கும்.

Medicateel Scentd Hair Oil.

மருந்துவகை சேர்ந்த வாசனைபொருந்திய கூந்தல் தைலம். வழுக்கைத் தலைக்கும், மயிர் வளரவும் உதவும். முகப்பருவு முதலியவைகளுக்கு வாசனையுள்ளமருந்தும் கிடைக்கும். இவைகளுக்கு சார்ஜ் நடுத்தரமானது, பொது ஜனங்கள் ஒருதடவை முயற்சி செய்யலாம், ஆர்டர் அனுப்பினால் உடனே சாக்கிரதையாக மருந்துகள் அனுப்பப்படும். இங்கிலீஷில் எழுதவேண்டும்

Apply To:—The Manager. GANGULY FRENDS & Co.
27 1, Sham Bazaar Street, Bagh Bazaar P. O., Calcutta.

பிடித்தமில்லாதபோனால் ரூபாய் திருப்பிஅனுப்பப்படும்.

எங்களுடைய பட்டில், மற்ற வியாபாரிகளைப்போல, நூலு கலப்பில்லை 14 முழம் நீளம் 54 இஞ்சு அகலமுள்ள ஒருதான் பட்டின் விலை ரூ 8முதல் 25 வரை. பீதாம்பரச்சேலை:—16 முழம் நீளம் $2\frac{1}{2}$ அகலம் விளிம்பும் முந்தியும் ஜரிகைவேலை உடல்சாதா ரூ. 18 முதல் 30 வரை. ரவிக்கைகட:—ஓரங்களில் ஜரிகை வேலை செய்தது. உடலில் ஜரிகைப் பூக்கள் போட்டது. எல்லா நிறத்திலும் கிடைக்கும். ரூ. 2-12-0. முதல் 5 வரை. குழந்தைகளுக்கு பீதாம்பர வேஷ்டிகள்:—4 முழம் நீளம் $1\frac{3}{4}$ முழம் அகலம் நாலுபக்கமும் ஜரிகையினால் வேலை செய்தது ரூ. 3 முதல் 5 வரை. இன்னும் அநேக விதமான பட்டுபீதாம்பரங்களுக்காக எங்களுடைய கேட்லாக் வரவழைத்துப் பார்க்கவும். எம். டி. ப்ரதர்ஸ் அன்கோ கேபாலாநாலா பனாஸ். பட்டு பீதாம்பரம் சொந்தமாக தயார் செய்பவர்கள்.

☞ M. D. BROTHERS & Co.,
Bolanala' Benares City,

LADIES TOILET SPECIALIST.

Chemicals to increase the growth of eyelashess-bleaching and whitening powder for the face and hands.—Hair lengthening and blackneng wash—brightening drops for eyes—Internal complexionipills. Fat reducing solution—skin tightener for loose and flabby parts—Rs. 1 each—consulatation on every other matters Solicited.

Dr. Prabhaker, Grant Road Bombay (American Graduate).

வேதாந்ததீபிகை என்னும் ஸ்ரீ அகோபிலமட சிஷ்ய சபை பத்திரிகை.

இப்பத்திரிகையின் முதல் இரண்டு சஞ்சிகைகளை வரப்பெற்றோம். இந்த இரண்டு சஞ்சிகைகளிலும் சபாத்யக்ஷர் உபந்யாஸம், தத்க்ரதுந்யாய விமர்ஸம், ஸ்ரீபகவத்கீதை, கபோதோ பாக்யாநம், ஸ்ரீ அகோபிலமடம் ஸ்வாமிகளின் பரம்பரை, பத்ராதிபரின் குறிப்புகள், வெகு நன்றாகவும் யாவரும் எளிதில் விசிஷ்டாத்வைதமதத்தின் தத்வங்களை அறிந்துகொள்ளுமாறு ஸம்ஸ்கிருத பாஷையில் பாண்டித்யமுள்ள கனவான்களால் எழுதப்பட்டிருக்கின்றன. மேலும் 2-வது சஞ்சிகையில் திருநாராயணபுரத்திலுள்ள ஸ்ரீ ஆதிவண் சடகோபஸ்வாமி பிருந்தாவனத்தின் அழகான சித்திரப்படம் அமைக்கப்பட்டிருக்கிறது.

திருநாராயணபுரம் மைசூர் சமஸ்தானத்தில் உள்ளது. மேல் கோட்டையென்று சொல்லப்படுவதும் இதுவே. ஸ்ரீ பாஷ்யக்காரர் பன்னிரண்டு வருஷம் எழுந்தருளியிருந்த மகிமையை இந்த ஸ்தலம் அடைந்திருக்கிறது. இம்மடத்துக்கு மூல புருஷரான ஸ்ரீ ஆதிவண் சடகோப ஸ்வாமியினுடைய பிருந்தாவனம் ஒன்று இதில் இருக்கிறது. இந்தப் பிருந்தாவனம் மிகவும் கிலமடைந்து முட்செடிகளால் மூடப்பட்டு மிகுந்த ஈன ஸ்திதியில் இருக்கிறது. அவ்வூர்ப் பெருமாள் செல்வப்பிள்ளை வெகு காலமாக இந்த வனத்துக்கு எழுந்தருளுவது வழக்கமாக இருந்தது. ஆனால், அதன் தற்கால நிலைமையையுத்தேசித்து, பெருமாள் இப்போது அங்கே எழுந்தருளுவதில்லை. சடகோபமாமுனிவரது வாக்காலேயே "இன்னுமொரு நூற்றாண்டிரும்" என்னும் மங்களாசாஸனம் பிறந்திருக்க, அதன் பொருள் அனுஷ்டானத்தில் இராமலிருப்பது விசனிக்கத்தகுந்ததே.

அடிக்கடி க்ரந்த எழுத்தில் ஸம்ஸ்கிருத சுலோகங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால் தமிழிலும் அச்சுலோகங்களிருந்தால் சம்ஸ்கிருதமும் கிரந்தலிபியும் தெரியாதவர்களுக்கும் அநுகூலமாயிருக்கும். சம்ஸ்கிருதம் தெரியாதவர்கள் இதிலுள்ள சிற்சில சம்ஸ்கிருத பதங்களை யறிந்துகொள்வது கஷ்டம். ஆகையால் வியாசம் எழுதும் கனவான்கள் கூடியவரையிலும் கடின சம்ஸ்கிருத பதங்களுக்குப் பதிலாக தமிழ்ப்பதங்களை உபயோகித்து வருவார்களென்று நம்புகிறோம்.

இப்பத்திரிகை விசிஷ்டாத்வைதமதக் கொள்கையுள்ளதாயிருந்தாலும் இதிலுள்ள சில விஷயங்கள் இதரமடங்களைச் சேர்ந்தவர்களுக்கும் ஞானபிவிர்த்திக்கு மிக உபயோகமுள்ளதென்று நம்புகிறோம். முக்கியமாக நமது ஸ்திரீகளுக்கு விசேஷ காலங்களில் அன்னம் ப்ரமாறும் விதம், ஆசாரவிதிகள பூஜாவிதிகள், தெய்வபக்தி முதலான நற்குணங்களைத் தெரிவிக்கும் விஷயங்களும் அடிக்கடி எழுதப்பட்டு வந்தால் அவர்களுக்கு மிக நன்மையைப் பயக்குமென்று எண்ணுகிறோம். இவ்வித அரிய பத்திரிகை ஒவ்வொருவரிடத்திலு மிருக்கவேண்டிய தவசியம். முக்யமாக வைஷ்ணவர்களுக்கு மிகவும் அவசியமானது. இதை ஒவ்வொருவரும் ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

இதன் வருஷ சந்தா ரூபா 2 தான். வேண்டுவோர், ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்திராதிபர், ஸ்ரீ கேசவப்பெருமாள் சந்நிதி வீதி, மைலாப்பூர், சென்னை என்று எழுதவேண்டும்.

1885ம் வருஷ ஸ்தாபிக்கப்பட்டது.

எச்சரிக்கை!!

நீர்ச்சூலை, யானைக்கால் முதலியவைகளை சொஸ்தப்படுத்தக்கூடிய உலக முழுவதும் பேர்பெற்றவும் விலையுயர்ந்தவுமான எங்களது மருந்துகளில் சிலவற்றை போலிவைத்தியர்கள் சிலர் வீணான உத்தரவாதம் கொடுப்போம், சௌக்கியமடைவீர்களென புளிகிக்கொண்டுவிற்று வருவது எங்களுக்கு தெரிவருகிறது. அவ்வித மருந்துகள் கல்கத்தா 85, பெச்சு சட்டர்ஜி தெரிவிலுள்ள (மருந்துவியாபாரிகளாகிய) B. கோஷ் அண்டு கம்பெனியாருடைய டாடர் கோஷின் மருந்துகளல்ல.

எங்கள் மருந்துகள் சிவில் சர்ஜின் டாக்டர் சேம்பர்ஸால் ஆதரிக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் கோஷின் ஆச்சரியகரமான காட்சிப்பொருள்.

நீர்ச்சூலை, யானைக்கால், குடர்ப்பிதுக்கம்,

Varicocle, முதலியவைகளுக்குச் சிறந்த ஔஷதம்.

இந்தமருந்தை வெளியில் பூசினால் வியாதி நாள்பட்டிருந்தாலும் சரி எவ்விதமான வியாதியாயிருந்தாலும் சரி நிச்சயமாய் வியாதியை நீக்கிவிடும், ஒரு அவுன்ஸ் புட்டி விலை ரூ. 2—8. அ.

ஒருபவுன்ட் நிறையுள்ளது ரூ. 30. எங்களுக்கு அநேகர் சிறந்த நற்காட்சி பத்திரங்க ளளித்திருக்கிறார்கள். டாக்டர் சேம்பர்ஸ் ஆதரிப்பவர், நரம்பு தளர்ச்சி, பலவீனம் எவ்விதத்தால் உண்டானபோதிலும் சரி இந்த எண்ணெயை உபயோகித்தால் கிழவர்களும் வாலிபராய் விடுவார்கள். ஒரு அவுன்ஸ் புட்டி விலை ரூ. 2. இதற்கும் நற்சாட்சி பத்திரங்களுண்டு.

பலவீனத்திற்கு டாக்டர் கோஷின் மருந்து.

நரம்பு தளர்ச்சியை உறுதிப்படுத்தத் தக்கமருந்து.

சிலநாள் இந்தமருந்தை உபயோகித்தால் உடனே குணம் தெரியவரும் கண்பார்வை, உண்டாகும். தேகபல முண்டாகும், ஞாபகசக்தியை யுண்டாக்கும், கண்மங்கலை நீக்கும், நாட்பட்ட மேகவெட்டை, சுளுக்கு, சளி, கோழை மூத்திரவியாதிகள் முதலியவைகளை சொஸ்தப்படுத்தும், ஒரு புட்டி விலை ரூ. 1. அ. 8.

டாக்டர் கோஷின் உலகபிரசித்திபெற்ற நன்னாரிவேர் சர்பத்து (Sarasaparilla) ஒருபுட்டி விலை ரூ. 1.

விநோதமான மோதிரங்கள்.

ரசாயன சாஸ்திரப்பிரகாரம் செய்யப்பட்டவைகள், இடதுகையில் மோதிரவிரலில் போட்டுக்கொண்டாலும் வியாதியுள்ளவர்கள் வியாதியின்றி சுகமாயும், சந்தோஷமாயும், சுத்த இரத்தத்துடனு மிருப்பார்கள், ஒரு மோதிரம் விலை ரூ. 1—8—0. டசன் ரூ. 12.

மேற்கூறிய மருந்துகளும் மோதிரமும் வேண்டியவர்கள் இங்கிலீஷில் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

B. GHOSE & CO,

CHEMISTS, (MODHOOR NEEKATUM)

158-Bechoo Chatterjee's Street, Calcutt.

மோஹனசுந்தரம்:—இது துப்பு அறியும் ஓர் இனிய நாவல். இராஜாம் பாள், சந்திரகாந்தா என்னும் சிறந்த புத்தகங்களை எழுதிய ம-௱-௱-ஸ்ரீ ஜே. ஆர். ரங்கராஜு அவர்கள் இப்புத்தகத்தையும் எளிய நடையில் யாவரும் சுலபமாக அறிந்துகொள்ளுமாறு எழுதியிருக்கிறது நமக்கு மிகுந்த மகிழ்ச்சி யையுண்டாக்குகிறது. மேலும் இதில் அழகான மூன்று சித்திரப் படங்களி ருக்கின்றன. இதன் விலையோ அணு 12, இதை ஒவ்வொருவரும் வாங்கி வாசிப்பதால் அறிவு விருத்தி யடையுமென்று நம்புகிறோம்.

இதில் சுந்தரமுதலியார் தமது புத்திரி விசாலாக்ஷிக்கு சங்கீதம் கற் பிக்க லீலாவதியை ஏற்படுத்தியதும், அவள் அவ்வீட்டிற்கே எஜமானியாய் அதிகாரம்செலுத்தியதும், பூபதி முதலியாரை மணம்புரிய லீலாவதி எண்ணி முயன்றது பலிக்காமற்போனதும், துப்பு அறியும் கோவிந்தன் ஒவ்வொரு சங்கதியையும் மிக்க நுட்பமாக அறிந்ததும், சுந்தரமுதலியார் கொல்லப்பட் டாரென்று தெரியவே, சிலர் சந்தேகிக்கப்பட்டதும், விசாலாக்ஷி காணமற் போய் பின் அகப்பட்டதும், மோஹன முதலியார் விஷமுண்டுமாண்டதும், போலீஸ் இன்ஸ்பெக்டர் மிக்க ஆச்சரியமடையுமாறு சுந்தரமுதலியாரை வரவழைத்து கோவிந்தன் அவருக்குக் காண்பித்ததும், விந்தையிலும் விந் தையாகயிருக்கிறது. கடைசியில் கெட்ட எண்ணமுள்ள துஷ்டர்கள் மாண் டதாகவும், விசாலாக்ஷிபூபதியை மணந்துசுகமாய் சுந்தரமுதலியாருடன்வாழ் ந்துவந்ததாகவும்கதைமுடிகிறது.இவைகள் வெகுசாமர்த்தியத்துடன்எழுதப் பட்டிருக்கின்றன. பற்பல நீதிகள் இதில் அடங்கியுமிருக்கின்றன. இவ்வுல கத்தில் நடக்கும் மோசங்களை சவிஸ்தாரமாய் விளக்கி காட்டியிருக்கிறார்.

பிரசிநோத்தர ரத்நமாலை

என்னும்

ஓர் வேதாந்த சாஸ்திரம்.

இது யாவருக்கும் புலப்படும்படியாகச் செந்தமிழ் நடையில் வினாவிடை ரூபமாய் விரிவான 1,000 பிரசிநோத்தரங்கள் வரை நல்ல வெண்மையான கிளேஸ் பேபரில் தெளிவான அக்ஷரங்களால் பாரம் 8-பேஜ் ஸைஸில் ஏறக் குறைய 150 பக்கங்கள் வரை அச்சிடப்பட்டுள்ளது. இதில் அகண்ட பரி பூர்ண சச்சிதானந்த ஸ்வரூபத்தின் மூன்று லக்ஷணங்களும், உள், வெளி என்ற இருவகைப் பிரபஞ்ச விஷயங்களும், அஃதாவது இந்த வுலகத்தைப் போல் நம் சரீரத்தினுள்ளிருக்கும் உலக விசித்திரங்களும், கர்மம், பக்தி ஞானமாகிய மூன்று யோகவிஷயங்களும், பிர்மம், சக்தி திரிமூர்த்தி என்ப வைகளின் வரலாறுகளும், ஈசுவர நிர்ணயத்தைப்பற்றிய ஒவ்வொரு மதஸ்த ரின் அபிப்பிராயமும், கங்காநதியின் உற்பத்தியும், மஹாமேருவின் சிறப்பும் சூரியனுடைய லோகயாத்திரையின் சூக்ஷுமமும், இன்னும் இவைப்போல் பல சிறந்த விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. தேவை யுள்ளவர்கள் இத னடியில் கையொப்ப மிட்டவருக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

வி. பி. மூலம் இதன் விலை அணு 10 (பத்து).

☞ வா. முத்துகிருஷ்ணய்யர்,
இந்துசாஸ்திராபிமானி,
கல்லிடைக்குரிச்சி,
திருநெல்வேலி ஜில்லா.

ஆதங்க நிக்ரஹ ஔஷதசாலா.

ஜகப்பிரசித்தியான

ஆதங்க நிக்கிரஹ மாத்திரைகள்.

நோயுள்ளவர்களுக்கும், நோயற்றவர்களுக்கு, ஆடவர்களுக்கும், ஸதிரீகளுக்கும், உபயுக்தமான ஆதங்க நிர்கிரஹ மாத்திரைகள் தற்கால பலவிருத்தி ஔஷதங்களுக்கெல்லாம் தலைவன்.

இந்தமாத்திரைகள்.

(1) ஜீரணசம்பந்தமான தொந்திரவுகளை நிவர்த்திப்பன.
(2) நரம்பு ஸ்தானங்களைப் பலப்படுத்துவன.
(3) இழந்துபோன ஞாபக சக்தியைத் திரும்பக்கொடுத்து ஞாபக சக்தியைப் பெருக்குவன.
(4) இரத்தசுத்தி விருத்திசெய்வன.
(5) தேகத்துக்குப் பலத்தையும், ஊக்கத்தையும், சுருசுருப்பையுங்
(6) உயிர் நிலைகளைத் திடப்படுத்துவன.
(7) கனவிலுண்டாகும் கெட்ட எண்ணத்தை அடியோடே
(8) இழந்துபோன பலத்தைத் திரும்பவும் கொடுப்பன.

32. மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1—0—0.

இனம்! இனம்!! இனம்!!

காமசாஸ்திரம்.

ஆரோக்கியம், செல்வம், சுகம் இவைகளைக்காட்டும் கைப்புத்தகம்.

உமது தேக ஆரோக்கியத்தைக் குறித்துக் கவலையிருந்தால் உமது விலாசத்தைத் தெரிவியும்; உடனே தபாற்கூலியுடன் இனமாக 160-பக்கங்களடங்கிய ஷை காமசாஸ்திரப் புத்தகம் அனுப்பப்படும்.

மணிசகர் கோவிந்தஜீ,

ஆதங்க நிக்கிரஹ ஔஷதாலயம்.

ஹெட் ஆபீஸ்:—ஜாம்நகர், கத்தியவார்.

பிராஞ்சு ஆபீஸ்:—மதிராஸ், 22, பிராட்வே.

சமாச்சாரக் குறிப்பு.

நைஸாமுக்கு லக்ஷ்மி கடாட்சம்.

கோல்கொண்டா என்ற கிராமம் நைஸாம் அவர்களுக்குச் சேர்ந்தது. இது ஐதராபாகத்திலிருக்கிறது. ஒரு கண்டிராக்டர் செங்கல் சுட பழயகோட்டைக்குச் சமீபத்தில் ஒரு இடம் பெற்று செங்கல்சுட ஏற்பாடு செய்தார். செங்கல் நன்ருக சுடப்பட்டிருக்கிறதாவென்று அறிய ஒருசெங்கல்லை எடுத்துப்பார்த்தார். அது முழுமையும் பளபளப்பாக தென்பட்டதாம். இதென்ன ஆச்சரியமாக யிருக்கிறதென்றெண்ணி இரண்டு மூன்று செங்கல்களை எடுத்துப்பார்க்கவே அவைகளும் அவ்விதமிருந்தன. உடனே இவைகளைப் பரிக்ஷித்தறிய ஏற்பாடு செய்தார். அவைகளின்மேல் சுவர்ணப்பொடி அதிகமாக சேர்ந்திருக்கிறதென்று தீர்மானிக்கப்பட்டதாம். இவைகளில் சுவர்ணப் பொடி எங்கிருந்து வந்ததென்று அநேகர் எண்ணக்கூடும். முன்காலத்தில் கோல்கொண்டாவில் பொன்சுரங்கங்களிருந்தன. இந்த யிடம் சுரங்கமுள்ள யிடமா யிருந்திருக்கக்கூடுமல்லவா? நைஸாம் அவர்களுக்குத் தெரியவே, உத்தியோகஸ்தர்கள் வந்து இவைகளைப் பரிக்ஷை செய்து செங்கல்களிலுள்ள பொன் விலை எவ்வளவோ கோடி ரூபாய் இருக்குமென்று மதிப்புபோட்டிருக்கிறார்களாம். அது போலீசாரால் பாதுகாக்கப்பட்டு வருகிறதாம். இதல்லவோ அதிர்ஷ்டம்.!!

ஷோளவந்தான் பெண்கள் பாடசாலை:—ஷோளவந்தான் போர்ட்பெண்கள் பாடசாலைப் பெண்களுக்கு பரிசு அளிக்கப்பட்டது. அச்சமயத்தில் ✓ம் கலெக்டர் மிஸ்டர் J. R. ஹிககின்ஸ் சபைத்தலைமை வகித்து பெண்மணிகளுக்கு வெகுமதிகளை அளித்தார். இப்பாடசாலையின் தலைமை உபாத்தியாயர் இதற்குச் சொந்தக் கட்டடமும் இன்னுமொரு உபாத்தியாயர் தேவையென்றும், உபாத்தியாயர்களின் சம்பளம் உயர்த்தப்படவேண்டுமென்றும் சொன்னதற்கு, தாலூகா போர்டில் போதுமான பணமில்லாமையால் தாம் இப்பொழுது ஒன்றும் செய்யமுடியாதென்றும் ஆயினும் 2 வருஷங்களுக்கப்பால் இவ்விஷயமாக ஏதாவது செய்யமுடியுமென்றும் சொன்னார். இப்பாடசாலை 1908ளு ஜூன்மீ 16உ பெண்கல்வியில் மிக்க அபிமானமுள்ள ம-ா-ா-ஸ்ரீ பி. நாராயண ஐயரவர்களின் ஊக்கத்தால் ஸ்தாபிக்கப்பட்டது. அப்பொழுது 21 பெண்களிருந்தார்களாம். இப்பொழுது 126 பெண்கள் படித்துவருவது இப்பாடசாலை அவ்வூருக்கு அவசியம் என்பதைத் தெரிவிக்கின்றதல்லவா?

விவசாயிகள்:—இந்தியாவிலுள்ள 294,361,056, ஜனங்களில் 195,668,362, விவசாயம் செய்து ஜீவிப்பவர்கள்.

பெங்களூர் தண்டில் ஆரிய சகோதரிகளின் சங்கம் வெகு ஒழுங்காக நடத்தப்பட்டு வருவதைக் கேட்க மிகச் சந்தோஷப்படுகிறோம். இச்சங்கத்தார் சில தமிழ்ப் பத்திரிகைகளையும் புஸ்தகங்களையும் வாங்கி வாசித்துவந்தால் மிக நலமா யிருக்குமென்று நமக்கு ஒருவர் எழுதுகிறார். இது சரியே, பிரசங்கங்களைக் கேட்பதுடன் புஸ்தகங்களையும் அடிக்கடி படித்துவருவது நலமல்லவா?

சென்ற 200-வருஷங்களாக ஜாம்நகர் மகாராஜா அரண்மனையின்
பரை வைத்தியப் பண்டிதர்களின் குடும்பத்தில் உதித்தவர்.

வைத்தியருக்கு ஏன் வீணாகப் பணம் கொடுக்கிறீர்கள்.

உலகமெல்லாம் பிரசித்திபெற்ற எங்களுடைய

மதனமஞ்சரி மாத்திரைகள்.

வாங்கி உபயோகியுங்கள் இந்த மாத்திரைகள் தங்கம் போன்றவை.

ஆண் பெண் இருபாலரும் வியாதியிருந்தாலும் வியாதியில்லாது போனாலும் வாங்கிப்புசிக்கலாம். தேகத்துக்குப் பலமும் நரம்புகளுக்கு வீரியமும் கொடுப்பதில் இதைவிடச் சிறந்த ஔஷதம் வேறில்லை.

இவை சிறிதாகவும் ருசியாகவும் இலகுவில் சாப்பிடக்கூடியவையும் ஒரு நாளைக்கு இரண்டு மாத்திரை யாதொரு பத்தியமு மில்லாமல் குமரர் முதல் கிழவர் வரை யாரானாலும சரியே, எக்காலத்திலும் எத்தேசத்திலும் சாப்பிடலாம்.

இவை (1) இரத்தத்தை சுத்திசெய்து, அதிகப்படுத்தும்.

(2) சகல விதமான நரம்புத் தளர்ச்சியையும் நீக்கி மூளையை குளிர்ச்சி யடைய செய்து ஞாபகசக்தியை பலப்படுத்தும், மூத்திர சம்பந்தமான சகலவித நோய்களையும் பறக்கடிக்கும்.

(3) உடம்பைச் சௌக்கியமும் பருமனும் அடையச்செய்யும்.

(4) புருஷத்துவத்தையும் வாலிபப்பருவத்தையும் கொடுக்கும்.

(5) வயிறு சம்பந்தமான சகல நோய்களையும் போக்கி கஷ்டமில்லாமல் மலத்தை வெளிப்படுத்தும்.

(6) கிழப்பருவம் வாராதபடி காத்து, இழந்துப்போன வாலிபத்தை கொடுக்கும்.

(7) மேகம், மது மேகம், பித்தக்குடு முதலிய சகல கொடிய நோய்களையும் வேருடன் போக்கும்.

(8) ஜனனேந்திரியங்களுக்குப் பலத்தையும் வலுவையும் கொடுக்கும்.

40 மாத்திரைகள் அடங்கிய ஒரு டின் விலை ரூ. 1. தபால்சார்ஜ் பிரத்தியேகம்.

மேலே சொல்லிய மருந்துகளைப் பற்றியும் இன்னும் எங்களிடமுள்ள சிலாக்கியமான வேறே மருந்துகளைப் பற்றியும் எங்கள் வைத்திய வித்தியா புஸ்தகத்தை வாசியுங்கள். அது சுகத்துக்கும், ஐசுவரியத்துக்கும் க்ஷேமத்துக்கும் பெரிய வழிகாட்டியாகும்.

இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, குஜாராத்தி, இந்தி, பெங்காளி, மராட்டி, இந்துஸ்தானி, முதலிய எந்தப்பாஷையில் வேண்டுமானாலும் இந்தப் புஸ்தகத்தை இனமாக நாங்களே லேபில் ஒட்டியனுப்புவோம்.

லக்ஷக்கணக்கான புஸ்தகங்கள் இதுவரை செலவாயிருக்கின்றன.

ஜாம்நகர் மகாராஜா எமது மருந்துகளைக் குறித்து முதல்திற நற்சாட்சிப்பத்திரம் கொடுத்திருக்கிறார்கள். பெனரிஸ் இண்டஸ்டிரியல் எக்ஸிபிஷனில் மெடலும் முதல்திற சர்டிபிகேட்டும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

ராஜவைத்திய நாராயணஜி கேசவஜி,
புரொப்ரைடர் ஆயுர்வேதோதய ஔதாலயா,
No. 717, சைனாபஜார்ரோட் ஜமேதார் காட்டுக்கெதிரில் சென்னை.